

25027

ஸ்ரீ:

ஸ்ரீசங்கரபகவத்பாதர்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீபவாநீபுஜங்கஸ்தோத்ரம்

श्रीभवानीभुजङ्गस्तोत्रम्

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE.
84, R. H. ROAD, MADRAS - 4

ASTR
JTE
N-4

வாதூல வே. ராமசந்த்ரசர்மா,

(எழுதிய பாவப்ரகாசிகா என்னும்
தமிழ் அநுவதத்துடன்
கூடியது)

விஷுவல் கிராபிக்ஸ்
எடிடோரியல் அஸோஸியேட்ஸ்
சென்னை.

Scanned by CamScanner

முதற் பதிப்பு: 1967

© ஆசிரியர் உரிமை பெற்றது.

Ph: 84[illegible]683.
K. R. KR[illegible]
No. 18, Ba[illegible]ishna Road,
Mylapore, Madras-600 004.

M.W.N. PRESS,
11, Lloyds Road, Madras-5.

THE KUPPUSWAMI SA[illegible]
RESEARCH INSTITUT[illegible]
MYLAPORE, CHENNAI-[illegible]

ஸ்ரீ மஹாகணபதி துணை

முன்னுரை

भवानि तव पादाब्जनिर्णेजनपवित्रिताः ।
भवामयप्रशान्त्यै त्वामपो याचामि भेषजम् ॥

"—ஓ பவாநி! உன்னுடைய சென்னிறச் சேவடிகளுடைய நீராஜனத்தினல் தூய்மை பெற்ற ஜலங்கள், எனது பிறவிக் கடலென்னும் கொடிய நோயின் சமனத்தின் பொருட்டு அருமருந்தாயமைய இறைஞ்சுகிறேன்." என்பது ஆன்ஹோர் வாக்கு.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அருளிய துதி நூல்கள் பலவற்றுள் இந்த "பவாநீபுஜங்கம்" என்பதும் ஒன்ருகும். இச்சிறு நூல் பதினைந்து செய்யுட்களைக் கொண்டு விளங்குவதாகும். பிரசுரிக்கப் பெற்ற வேறு சில பிரதிகளில் பதினேழு செய்யுட்களும் காண்கின்றன. அவைகளையும் ஒப்பு நோக்கி இந்நூலின் இறுதியிலே சேர்த்துள்ளேன்.

இந்நூலின் துவக்கத்திலுள்ள முதற் செய்யுளானது, யோக முறையினைச் சுருக்கி விளக்கும் வகையிலே அமைந்துள்ளது. மற்றும், இந்நூலை இயற்றிய ஸ்ரீ சங்கரர், கவிகளுடைய மரபைத் தழுவி, துவக்கத்திலே அவையடக்கம் கூறும் வகையான் குண்டலநீ வடிவாயமைந்த அன்னையாம் ஸ்ரீ பவாநீ தேவியைத் துதிக்கிருர்.

பவாநீ என்னும் சொல்லின் விளக்கம் வருமாறு
भवः (பவ:) சிவன். அவனுடைய மனைவி என்பதாகும்.

அல்லது भवन्ति-பவந்தி, भूतानि-பூதாநி-यस्मात्-யஸ்மாத்-इति-இதி-भवः-பவ: எனவும் கொள்ளலாம். அதாவது எவனிடமிருந்து இந்த சராசரங்கள் உண்டாகின்றனவோ, அவன் பவன் என அழைக்கப் பெறுவன். ஆகவே சராசரங்கள் யாவையும் தோற்றுவிப்பவன் என்பதும் அச்சொல்லின் ஸாரம். அவனுடைய மனைவி என்றதால் உலகத் தோற்றத்திற்கும் அன்னையின் உதவியும் அவனுக்கு அவசியம் எனவும் கிடைக்கப் பெறும்.

அல்லது 'பவம்' என்னும் சொல்லானது ஸம்ஸாரத்தையும், காமனையும் சுட்டும். அக்காரணம் கருதி ஸம்ஸாரத்தை அல்லது காமனை ஜீவிக்கச் செய்பவள் எனவும் கருத்துண்டு. அதாவது भवम्-பவம் आनयति-ஆநயதி-ஜீவயதி என்பது விக்ரஹமாகும். விக்ரஹம்-ஸமாஸம். அல்லது சிவனுடைய எண்வகை மூர்த்திகளில் இரண்டாவதான பவன் என்னும் மூர்த்தியினுடைய மனைவியாம் உஷையின் வடிவாயிருப்பவள் எனவும் பொருள் கொள்ளலாம். இன்னோரன்ன பல விளக்கங்களை வாயுபுராணம், பத்மபுராணம் முதலியவைகளில் பரக்கக் காணலாம்.

முதற் செய்யுளில், இக்குண்டலிநீ கண்ணுக்குப் புலப்படாது அருவாயிருப்பினும், அதற்கு ஓர் உருவம் அமைத்து, அக்குண்டலிநீ தேவியைத் தமது மனக் கண்ணிலே உருவகம் செய்து கொண்டு 'துதிக்கிறேன்' எனவும் சொல்லுகிறார். இரண்டு முதல் எட்டுச் செய்யுட்கள், அன்னையின் திருமேனியின் வைபவங்களை வெகு அழகாக் விளக்குகின்றன. ஒன்பதாவது

செய்யுள், ஸ்ரீ சக்ரத்தின் இலக்கணத்தைச் சொல்லுவதோடு, அச்சக்ரத்திற்கு உரியனவான பரிவார தேவதைகளையும், அவைகளின் நிலைகளையும் விளக்குவதாகும். பத்து முதல் பதினான்கு செய்யுட்கள், ஸ்ரீதேவியே உலகத் தோற்றமாகவும், அவ்வுலகில் இயங்குகின்ற தேவர்கள், ஐம்பெரும் பூதங்கள் முதலிய வடிவாகவும் அமைந்துள்ளவள் என்பன போன்ற பல விஷயங்களைத் தெரிவிக்கின்றன. பதினைந்தாவது செய்யுள் பலச்ருதியின் வடிவாயமைந்துள்ளது.

ஸ்ரீசங்கரர் அத்வைதமத்தைத் தழுவியவராயினும், ஆத்மஞாநம் கைவரப் பெருத மந்தாதிகாரிகளான மாந்தர்களுக்கு எளிய முறையிலே மனதிலே பதியும் வண்ணம் அழகிய செய்யுட்களமைந்த பல துதிகளை; பக்தி ஞாநம், யோகம் என்ற முறையினைத் தழுவி வெகு அழகான நடையிலே அமைத்துத் தந்துள்ளார்.

ஒருவன்; பக்தி, ஞாநம், யோகம் இவைகளின் வாயிலாக ஸகுணோபாஸனையைச் செய்து, அந்த உபாஸனையில் மனம் ஒரு முகமாக நிலைத்திருக்கப் பழகிய பின்னரே, நிர்குணோபாஸனையைச் செய்ய முடியுமென்பது ஆன்றோர்களான நமது மஹர்ஷிகளுடைய கட்டளையுமாகும். மனம் ஒருமுகமாகக் குவிந்தாலன்றி பக்குவமடையாது. பக்குவம் பெருத மனம் பல வழிகளிலும், தன்னிச்சையாகத் திரிந்து கொண்டு, நிலைகொள்ளாது அலைந்த வண்ணமிருக்கும்.

ஆதலின் அடிக்கடி அர்ச்சனை, நாமஸங்கீர்த்தனம், ஆசார்யஸேவை, பாதுகாஸேவை முதலியவைகளைத் தொடர்ந்து செய்து வரப் பழகினால், அந்த

Scanned by CamScanner

அந்த நாமாக்களுக்குரிய ப்ரதீகங்களில் (விக்ரஹம்) ஒரு கணமாவது மனம் நிலைத்து நிற்பதையும் நாம் அநுபவவாயிலாகக் காணமுடியும்.

இம்முறையினைத் தழுவியே பல பக்தசிகாமணிகள் ப்ரதீகோபாஸனையைச் செய்தே அழியாப் புகழையடைந்து, நிலைத்த பேரின்பத்தையும் எய்தியுள்ளனர் என்பதை ஆங்காங்கு நமது வேதங்களிலும், புராணங்களிலும் பரக்கக் காணலாம்

இதற்குச் சான்றாக; நாதரர், தும்புரு, துருவன், ப்ரஹ்லாதன் அஜாமிளன், குசேலர், உத்தவர், முதலியவர்களைக் கொள்ளலாம். இக் கலியிலும் ஜயதேவர், க்ஷேத்ரஜ்ஞர், துகாராம், துளஸீதாஸர், ஸ்ரீஸதாசிவப்ரஹ்மேந்த்ரர் ஸ்ரீமந் நாராயணதீர்த்தர், ஸ்ரீத்யாகராஜர், ஸ்ரீதரவேங்கடேசர், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீச்யாமா சாஸ்த்ரிகள், பட்டணம் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய அய்யர் போன்ற மஹான்களுடைய வரலாறுகளையும் காணலாம். இவர்கள் அனைவரும் பகவந்நாமஸங்கீர்த்தனம் செய்தே அழியாப் புகழுடன், நிலைத்த பேரின்பமும் கைவரப்பெற்ற மஹநீயர்கள் என்பதிலும் ஐயமில்லையன்றோ!

எனவே ஸகுணோபாஸனையைச் செய்யவல்ல பல துதிகளையும், நாம் அநுதினமும் அநுஸந்தானம் செய்ய வேண்டுமென்பதும் கிடைக்கப் பெறுவதாகும் இக்காரணம் கருதியே நமது பரமாசார்யரைப் போன்ற பல சான்றோர்கள் வித்தகராயினும் தக்க நெறியிலே நாம் நிற்கவேண்டுமெனக் கருதியே துதிகளின் வடிவாயமைந்த பல நூல்களை இயற்றிப் போந்தனர்.

இங்ஙனமிருக்க, இத்துதிகள் போன்றவைகளை, ஆசார்யரைப் போன்ற பலர், பழுத்த ஞானியாயிருப்பதால் எங்ஙனம் இவைகளை யியற்றி இருக்க முடியும் எனச் சிலர் கூறுகின்றனர். இக்கூற்றும் பொருந்தாது. ஏனெனில்; ஸ்ரீகாளிதாஸன் ஸ்ரீஅப்பயதீக்ஷிதர், ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர், ஸ்ரீராமபத்ரதீக்ஷிதர் ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீசிவாநந்தயதி. ஸ்ரீஅம்ருதாநந்தயதி, ஸ்ரீ யாமுநாசாரியர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன், ஸ்ரீவேங்கடாத்வரி போன்ற பல சான்றோர்கள் அனைவரும் பல சாஸ்தரங்களில் பாண்டித்யம் அடைந்தவர்கள் என்பதும், பல துதி நூல்களையும் இயற்றியுள்ளனர் என்பதும் வெள்ளிடைமலை யன்றோ!

மற்றும், இத் துதிகளை நுணுக்கமாக ஆராய்ந்தால், அவர்களுடைய அருமை பெருமைகளையும் நாமறியாமல் இருக்க முடியாது. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் நமக்கு ஒன்றும் புலப்படாது. இதற்கு உதாஹரணமாக இந்நாலின் துவக்கத்திலேயுள்ள முதற்செய்யுளைச் சிறிது சிந்தனை செய்தால் தெள்ளென விளங்கும்.

ஆகவே; யுக்திக்கும், அநுபவத்திற்கும், ஆராய்ந்சிக்கும் உதவாத இயற்றியவர்களுடைய காலம், தேசம் இவைகளை நிர்ணயம் செய்வதையும் இவர்கள் இவைகளைச் செய்திருப்பார்களா ? செய்திருக்க மாட்டார்களா? என்பன போன்ற ஒன்றுக்கும் உதவாத சர்ச்சைகளையும் விடுத்து, ஸாராம்சத்தை க்ரஹித்துக்கொண்டு, பொன்னான காலமும் பொய்த்துப் போகாதிருக்க, நாம் விழிப்புடன் இருக்க

Scanned by CamScanner

வேண்டியதும் நமது இன்றியமையாத கடமையுமாகும்.

எனவே, ஆஸ்திக அன்பர்களான ஆண், பெண் அனைவரும், இவைபோன்ற பல நூல்களைத் தினந்தோறும் பாராயணம் செய்து, அந்த அந்த மூர்த்தங்களின் பெருமைகளையும், கல்யாண குணங்களையும், மனதிலே நினைக்கும் தோறும் மெய் சிலிர்க்கச் செய்யும் நிலையெய்து, அன்னையினிடம் ஒன்றிய நிலையையும் கைவரப் பெற்றுத் தங்களை ஆழ்ந்த பக்தியிலே திளைத்து நிற்பதற்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்து கொண்டு, அவளுடைய திருவருளுக்கு அர்ஹதையுள்ளவர்களாகவும் தங்களைச் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஆசிரியன்.

௨௫௦௨௭

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE, CHENNAI-4

பொருளடக்கம்

முன்னுரை		i—viii
ஸமர்ப்பணம்		ix
ஸ்ரீமுகம்		x—xi
தோற்றுவாய்		1—66
ஸ்ரீபவாநீபுஜங்கஸ்தோத்ரம்		67—101
அநுபந்தம்	(1)	103—104
,,	(2)	105
,,	(3)	106—111
,,	(4)	112—117
,,	(5)	117
,,	(6)	118—128
பிழைத் திருத்தம்		130

Scanned by CamScanner

ஸமர்ப்பணம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யஸ்வாமிகளுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் பக்தி ச்ரத்தையோடு ஸமர்ப்பணம் செய்யப்பெருகின்றது.

250

ஸ்ரீ:

ஜய ஸ்ரீ சந்த்ரமௌளீச்ரவர
ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவிராஜகாசார்யவர்ய
ஸ்ரீமச்சங்கரபகவத்பாதப்ரதிஷ்டித
ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீசந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீபாதாதே சாநு ஸாரேண
ஸ்ரீமஜ்ஜயேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீபாதை: க்ரியதே நாராயண ஸ்ம்ருதி:

உபநிஷத்துக்கள், பகவத்கீதை, ப்ரஹ்மஸூத்ரங்கள் இவைகளுக்கு பாஷ்யங்கள் செய்து அத்வைத மதத்தை நிலைநிறுத்தியுள்ள ஸ்ரீ பகவத்பாதாசார்யாள் ஞானமார்க்கத்துக்குப் பூரணத் தகுதியை யடையாதவர்களுக்கு, மனதின் ஒருமைப் பாட்டுக்கு உற்ற உபாயமான ஸகுணோபாஸனைக்கு அவலம்பமான பகவானின் அநேக மூர்த்திகளின் பல ஸ்தோத்ரங்களையியற்றியருளியிருக்கிறார்கள்.

இவைகளுள் புஜங்க ப்ரயாதம் என்னும் விருத்தத்தில் அம்பாளைப் பற்றிய ஸ்ரீபவானீ புஜங்க ஸ்தோத்ரமானது யோக சாஸ்த்ர விஷயங்களையும், அம்பாளின் மூர்த்தி ஸௌந்தர்யத்தையும், ஸ்ரீசக்ரத்தின் விசேஷங்களையும், அம்பாளின் ஸர்வாத்ம பாவத்தையும், வர்ணிக்கிறது.

இந்த புஜங்க ஸ்தவத்திற்கு மந்த்ரசாஸ்திரங்களில் வெகு காலமாக உழைத்து வருகின்றவரும், தேவீமாஹாத்ம்யம் முதலிய உயர்ந்த மந்த்ரசாஸ்ர நூல்களுக்கு உரை எழுதியுள்ளவருமான வாதூல ஸ்ரீராமசந்த்ர சர்மா அவர்கள், லலிதமான தமிழ் நடையில் இயற்றியுள்ள பதவுரை, பொழிப்புரை, தகுந்த அவதாரிகைகள் இவைகளின் மூலம் அந்தந்த விஷயங்களைத் தகுந்தபடி விளக்கியிருப்பதுடன்,

முக்யமாக முகவுரையில் யோகசாஸ்தர விஷயங்களை, விசேஷமாக மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களை அநேக ப்ரமாணங்களோடு தெளிவாக்கியிருக்கிறார்.

தமிழுணர்ந்த பக்தர்களும், யோகமார்க்கத்தை அப்யஸிப்பவர்களும், இவ்வுத்தம நூலின் துணைக்கொண்டு, அம்பாளை ஆராதித்து இம்மை, மறுமைப் பயன்களை அடைவார்களாக.

யாத்ராஸ்தாநம் விஜயவாடா
ப்லவங்க சைத்ர பஹுளஷஷ்டீ } நாராயண ஸம்ருதி:

ஸ்ரீ:

ஸ்ரீபவாநீபுஜங்கஸ்தோத்ரம்:

தோற்றுவாய்

1. ஐம்புலன்களையும் தக்கதோர் நெறியிலே இயங்கச் செய்கின்றவர்களும், அக்காரணம் கொண்டு ஆன்மஞாந வளர்ச்சியைப் பெற்றவர்களுமான யோகிகள், ப்ரஹ்மாண்டம், பிண்டாண்டம் என இவ்வுலகை இரு வகையாக வகுத்துக்கொண்டு, ப்ரஹ்மாண்டத்திலுள்ள ஸூர்யன், சந்த்ரன் முதலிய க்ரஹங்களையும், நக்ஷத்ர ஸமூஹங்களையும், மற்றுமுள்ள எல்லாவற்றையும் பிண்டாண்டமான இச்சரீரத்திலேயே இருப்பதாக ஸங்கல்பம் செய்துகொண்டு, ப்ரஹ்மாண்டத்தையும், பிண்டாண்டத்தையும் தம்முள்ளே ஒன்றுபடுத்திக் காண்கின்றனர்.

2. இக் கருத்தைச் சிவஸம்ஹிதையும்;

"देहेऽस्मिन् वर्तते मेरुः सप्तद्वीपसमन्वितः ।
सरितः सागराः शैलाः क्षेत्राणि क्षेत्रपालकाः ॥
ऋषयो मुनयः सर्वे नक्षत्राणि ग्रहास्तथा ।
पुण्यतीर्थानि पीठानि वर्तन्ते पीठदेवताः ॥
सृष्टिसंहारकर्तारौ भ्रमन्तौ शशिभास्करौ ।
नभो वायुश्च वह्निश्च जलं पृथ्वी तथैव च ॥
त्रैलोक्ये यानि भूतानि तानि सर्वाणि देहतः ।"

(शि॰सं॰ २-१-४)

Scanned by CamScanner

"மேருவும் ஏழுதீவுகளும், நதிகளும், ஸமுத்ரங்களும், மலைகளும், க்ஷேத்ரங்களும், க்ஷேத்ரபாலர்களும், மஹர்ஷிகளும், முநிபுங்கவர்களும், ஸமஸ்த நக்ஷத்ரங்களும், ராசிகளும், நவக்ரஹங்களும், புண்ய தீர்த்தங்களும், பீடங்களும், பீடதேவதைகளும், ஸ்ருஷ்டி (தோற்றம்) ஸ்திதி (நிலைத்தல்) 'ஸம்ஹாரம் (மறைவு) என்ற முத்தொழிலையும் நடத்துகின்ற தேவதைகளும், உலகைச்சுற்றி வருகின்ற ஸூர்யன், சந்த்ரன் என்ற இருவரும், மேகம், வாயு, அக்நி, ஜலம், பூமி முதலிய ஐம்பெரும் பூதங்களும், இம் மூன்று உலகங்களும், மற்றுமுள்ள ஸ்தாவரஜங்கமவடிவான எவ்வளவு ஜீவராசிகளுண்டோ அவை அனைத்தும் இச்சரீரத்திலே இருக்கின்றன" என வலியுறுத்தும்.

3. இவ்வித ஐக்யத்தோடு கூடிய ப்ரபஞ்சமானது,

"पादोऽस्य विश्वा भूतानि" (पुरुष ०-१-२)

"பரம புருஷனுடைய பாதத்தைத் தவிர வேறன்று" என்ற ச்ருதியினுடைய ப்ரமாணத்தையநுஸரித்து சிவனுடைய அங்கமாயிருப்பது கொண்டு, யோகிகளால் த்யாநம் செய்யப் பெறுகின்றது. ஏனெனில்,

"तत् सृष्ट्वा तदेवानुप्राविशत्" (तै०उ० ०-२६)

"அதைப் படைத்து அதனூடே தானும் அந்தர்யாமியாகப் பரவியிருக்கிறான்" என்ற உபநிஷத்வாக்யமும் இக் கருத்தை வலியுறுத்துவதால் என்க.

4. ஆகவே மந்த்ரங்களைக் கண்ட மஹர்ஷிகள் பிண்டாண்டத்தில் சப்தப்ரஹ்மத்தை ப்ரணவத்தின் வாயிலாகவும், ப்ரபஞ்சத்தைத் தாமரையிதழ்த் தண்ணீரென

வேறாகவும், ஒன்றாகவும் கண்டு கொண்டு பரமாத்மாவை த்யாநம் செய்கின்றனர், அந்த ப்ரணவமும், அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, கலை என்ற ஆறும் ஒன்று சேர்ந்ததாகும்.

5. இந்த ப்ரணவத்தின் உள்ளேயுள்ள அகார உகாரமகாரங்களினால் ப்ரஹ்மக்ரந்தி முதலிய மூன்று க்ரந்திகளையும், பிந்து, நாதம் இவை யிரண்டையும் கொண்டு மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை என இங்ஙனமுள்ள ஆறு ஆதாரங்களையும் த்யாநம் செய்வதைக் குறிப்பாகச் சொல்லப் பெறும். முடிவிலுள்ள கலையைக் கொண்டு ஸூர்யசந்த்ரர்களுடைய கிரணவடிவங்களான (கதிர்கள்) (360) தினங்களையும் குறிக்கப் பெறுவதும் ஆம். அத்தினங்களுடைய கிரணங்களை (ரச்மிகள், தேஜஸ்ஸுகள் ஒளிகள்) காலவடிவாகத் திகழும் சிவனையும் த்யாநம் செய்யப் பெறும்.

6. இக்கருத்தையே பைரவயாமளமும் பின்வருமாறு வர்ணித்துள்ளது ;

"अष्टोत्तरशतं वह्नेः षोडशोत्तरकं रवेः ।
षट्त्रिंशदुत्तरशतं चन्द्रस्य च विनिर्णयम् ॥
ब्रह्माण्डं भासयन्तस्ते पिण्डाण्डमपि शंकरि ।
दिवा सूर्यस्तथा रात्रौ सोमो वह्निश्च संध्ययोः ॥
प्रकाशयन्तः कालांस्ते तस्मात् कालात्मकास्त्रयः ।
षष्ट्युत्तरं च त्रिशतं दिनान्येव तु हायनम् ॥
हायनात्मा महादेवः प्रजापतिरिति श्रुतिः ।"
(भैरव ०)

"அக்நியினுடைய கலைகள் (108) எனவும்; ஸூர்யனுடைய கலைகள் (116) எனவும்; சந்த்ரனுடைய கலைகள் (136) எனவும் நிர்ணயம் செய்யப் பெற்றுள்ளது. ஓ சங்கரி! அவைகள் பிண்டாண்டத்தையும், ப்ரஹ்மாண்டத்தையும் ஒளிரச் செய்வன. பகலிலே ஸூர்யனும், அவ்விதமே இரவில் சந்த்ரனும், இரண்டு ஸந்திகளிலே (மாலை நேரம்) அக்நியும் ஆக இம் மூவரும் காலங்களை இயங்கச் செய்கின்றவர்கள். ஆதலின் இம் மூவரும் மூன்று காலங்களின் வடிவாகவும் அமைந்திருப்பவர்களேயாவர். (360) தினங்கள் கொண்டது ஒரு ஹாயநமாகும். அதாவது வர்ஷம். வர்ஷத்தின் வடிவாய்த் திகழ்பவன் மஹாதேவன்—ப்ரஜாபதி—எனவும் வேதம் சொல்லும்" என்பதாகும்.

7. யோகசாஸ்திரமும்,

"बिन्दुनादकलातीतं यस्तं वेद स योगवित् ।"

"பிந்து, நாதம், கலை இம் மூன்றையும் கடந்து நிற்கும் தத்துவத்தை (வஸ்துவை) எவன் உணருகின்றானோ அவனே சிறந்த யோகியாவன்." எனச் சொல்லும். எனவே இப் பெருமை வாய்ந்த பிந்து நாதங்களைக் கொண்டு கல்பனை செய்யப் பெற்றுள்ள ஆறு ஆதாரங்களையும், அவைகளுடைய வடிவங்களையும், இருப்பிடங்களையும், அவைகளிலே அடங்கியுள்ள தத்துவங்களையும் இச் சிறு நூலில் விளக்க வேண்டியது அவசியமாயிருப்பதால் அவைகளைச் சிறிது விளக்குவோம்.

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
84, R.H. ROAD, MADRAS-4

8. இவ்விடத்தில் சொல்லப்பெற்ற பிந்துவென்பது சிவனும், நாதமென்பது சக்தியுமாகும். இவையிரண்டும் முறையே ஸூர்யசந்த்ரவடிவங்களாகவும், சுக்ல (வெளுப்பு) ரக்த (சிவப்பு) வர்ணங்களாகவும் இருப்பனவாம். சந்த்ரஞானவித்தையிலும்,

"त्रिकोणरूपिणी शक्तिर्बिन्दुरूपः शिवः स्मृतः ।
अविनाभावसंबन्धस्तस्माद् बिन्दुत्रिकोणयोः ॥"

"பிந்துவடிவம் கொண்டவன் சிவன் எனவும், முக்கோணவடிவம் கொண்டவள் சக்தியெனவும், இவர் இருவருக்கும் இடையறாத நிலைத்த ஸம்பந்தமிருப்பதினாலேயே பிந்துத்ரிகோணம் என்ற வழக்கும் உண்டாகியது". எனச் சொல்லப்பெற்றுள்ளது. சிவசக்திகளில் சிவன் பிந்து. அதாவது வருத்த (0) (வட்டம்) வடிவமாகவும், சக்தி △ முக்கோண வடிவமாகவும் இருப்பதாலேம்.

9. மேலும் இந்த நாதம், பிந்து இவையிரண்டும் ஸ்ரீசக்ர வடிவாகத் திகழும் ராஜராஜேச்வரியினுடைய சரீரமெனச் சக்தியுபாஸகர்களால் உருவகம் செய்து கொள்வதுமாகும். இந்த ஸ்ரீசக்ரத்திற்கு நாற்பத்து மூன்று முக்கோணங்களுண்டு. அவை முறையே சிவகோணம் நான்கு; சக்திகோணம் ஐந்து; அஷ்டதளம்; ஷோடசதளம், மூன்று வலயங்கள்; நான்கு சக்ரங்கள், நாதம், பிந்து, கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவதாகும்.

10. இந்த ஸ்ரீசக்ரமென்ற சரீரத்திலே யோக சாஸ்திரங்களிலே விளக்கியுள்ள ஆறு ஆதாரங்களும்

அடங்கியுள்ளன. இக் காரணத்தைக் கொண்டே தேவீ உபாஸகர்கள் சக்தியை முக்கோண வடிவமாகவும்,; பிந்துவை வட்ட வடிவமாகவும், கல்பனை செய்வதும் ஆம். இக்கருத்தையே ஸுபகோதயமும்;

"त्रिकोणं चाधारं त्रिपुरतनु तेऽष्टारमनघे
भवेत् स्वाधिष्ठानं पुनरपि दशारं मणिपुरम् ।
दशारं ते संवित्कमलमथ मन्वश्रकमुमे
विशुद्धं स्यादाज्ञा शिव इति यतो बैन्दवगृहम् ॥"

(सुभग० १०)

"ஓ அன்னையே! மாசற்றவளே! உனது சரீர மென்னும் ஸ்ரீசக்ரத்திலுள்ள ஆதாரம் முக்கோணமாக வும்,ஸ்வாதிஷ்டாநம் அஷ்டாரமாகவும், மறுபடியும்,மணி பூரகம் தசாரமாகவும், உன்னுடைய அநாஹதமானது பஹிர் தசாரமாகவும், பிறகு உமையே! உன்னுடைய விசுத்தி மந்வச்ரமாகவும், பிறகு ஆஜ்ஞை சிவ வடிவாம் பிந்துவின் இருப்பிடமாகவும் அமைந்திருப்பதன்றோ!" என வலியுறுத்தும்.

11 மேலும் பை;வயாமளமும்: இக் கருத்தை உறுதிசெய்கிறது. அதாவது—

"त्रिकोणमष्टकोणं च दशकोण द्वयं तथा ।
मनुकोणं चतुष्कोणं कोणचक्राणि षट् क्रमात् ॥
मूलाधारं तथा स्वाधिष्ठानं च मणिपूरकम् ।
अनाहतं विशुद्धाख्यमाज्ञाचक्रं विदुर्बुधाः ॥
नवाधारस्वरूपाणि कोणचक्राणि पार्वति ।"

(भैवु॰)

"முக்கோணம், அஷ்டகோணம், இரண்டு (உள்-வெளி) தசாரகோணங்கள், மநுகோணம், சதுஷ்கோணம், என்ற இந்த ஆறு கோணங்களும் முறையே மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை, என்ற சக்ரங்களாக அமைந்துள்ளன என அறிஞர்களும் சொல்லுவரன்றோ! ஓ பார்வதி! ஒன்பது ஆதாரங்களும் கோணசக்கரங் களாக அமைந்திருப்பனவன்றோ!" என்பதாகும்.

12 எனவே ஸ்ரீசக்ரத்தினுடைய நடுவேயுள்ள முக்கோணமானது மூலாதாரமாகும், அஷ்டகோணம் ஸ்வாதிஷ்டாநம், உள்ளேயுள்ள தசாரம் மணிபூரகம், வெளியேயுள்ள தசாரம் அநாஹதம், சதுர்தசாரம் விசுத்தி, சிவசக்ரங்கள் நான்கும் ஆஜ்ஞை என்பதுவும் கிடைப்பதாகும். இவ்விடத்தில்;

"बिन्दुश्चाष्टदलं पद्मं पद्मं षोडशपत्रकम् ।
चतुरश्रं च चत्वारि शिवचक्राण्यनुक्रमात् ॥"

"பிந்துவும், அஷ்டதளபத்மம், ஷோடசதளபத் மம், சதுரச்ரம் என்ற நான்கும் முறையே சிவசக்ரங்க ளாகும்." என்பது குலயோகிகளுடைய மதமாகும். (அபிப்ராயம் அல்லதுகொள்கை.)

13. மற்றும் சில யோகிகளுடைய மதமானது சிறிது வித்தியாஸத்தோடு காணப்படுகின்றது. அது எவ்விதமெனில்—

"एक एव शिवो बिन्दुर्दशधा भिद्यते ततः ।"

"சிவ வடிவாயமைந்த அந்த ஒரு பிந்துவே பத்து வகையாகப் பரிணமிப்பதாகும்" என்ற சந்த்ரஞாந

Scanned by CamScanner

வாக்யத்தாலும், இவ்விதமே,

"स्वाधिष्ठाने संहार: षड् बिन्दुकृत: ।"

" ஸ்வாதிஷ்டாநத்தில் ஆறு பிந்துக் களின் முடிவாகும்." என்ற பாதஞ்ஜலயோகஸூத்ரத்தாலும், மூலாதாரத்தினுடைய நான்கு தளங்களும் முறையே மநம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற இவைகளும், ஸ்வாதிஷ்டாநத்தினுடைய ஆறு தளங்களும் முறையே காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற இவைகளுமாக ஒன்றுயமைந்த பிந்துவேதான் இவ்விதம் பத்துவகையாகப் பரிணமித்திருக்கின்றன என வர்ணிக்கப் பெறும்

14. இந்த ஆறு ஆதாரங்களும் மநதால் கல்பனை செய்யப்பட்டதே யன்றி அந்தந்த ஸ்தாநங்களில் உண்மையில் ஸ்ருஷ்டியினூடே காக்ஷிவடிவாயமைந்தவைகளல்ல. இதற்குச் சான்று துர்வாஸமுநிவரால் இயற்றப் பெற்ற தேவீமஹிம்நஸ்தவத்தில் உள்ளது. அது வருமாறு,

"आदिक्षान्तसमस्तवर्णसुमणिप्रोते वितानप्रभे
ब्रह्मादिप्रतिमाभिकीलितषडाधाराब्जकक्षोन्नते ।"

" அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள ஐம்பத்தொன்று அக்ஷரங்களென்னும் நல்ல மணிகள் கோர்க்கப்பெற்ற விதாநத்தில் (மேல் தட்டு) விளங்குவதும், மூலாதாரம் முதல் ஆஜ்ஞை வரையிலுள்ள

ஆறு ஆதாரங்களுடைய நடுவிலே முறையே ப்ரஹ்மா விஷ்ணு முதலிய தேவர்கள் அமர்ந்து விளங்க, அவைகளுக்கும் அப்பால் உயரத்தில்" எனச் சொல்லியிருப்பது மாகும்.

ஆகவே இவ்விடத்தில் இந்த ஆறு ஆதாரங்களுடைய நிலைகளும், அவைகளின் விளக்கங்களும் அடியில் வருமாறு சுருக்கமாக விளக்கப் பெறுகின்றன.

(க)மூலாதாரம்.

1. இது ஆறு ஆதாரங்களுக்குள் முதலாவதாகும் இந்த மூலாதாரத்தினுடைய இருப்பிடம் சரீரத்தின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளது;

" गुदात्तु द्व्यङ्गुलादूर्ध्वं मेढ्रात्तु द्व्यङ्गुलादधः ।
चतुरङ्गुलविस्तारमाधारं वर्तते समम् ॥"

(शिव० २-२१)

"குத்ததிலிருந்து இரண்டு அங்குலம் மேலும், மேட்ரத்திலிருந்து இரண்டு அங்குலம் கீழுமாக நான்கு அங்குல விஸ்தாரத்துடன் விளங்குவதாகும். இதுவே தான் மூலாதாரசக்ரம் என்பது" எனச் சிவஸம்ஹிதை கூறும்.

2. இது நான்கு இதழ்களுடன் விளங்குவதாகும். இந்த இதழ்கள் நான்கும் அந்தக் காரணமாகும். இதற்கு மூலாதாரம் எனப் பெயர் வழங்கியதற்குக் காரணமும் வருமாறு.

"मूलमाधारशक्तानां मूलाधारं विदुर्बुधाः ।
सर्वाधारा मही यस्मान्मूलाधारतया स्थिता ।
तदभावे तु देहस्य पातः स्यादुद्गमोऽपि वा ॥
(रुद्र०)

"இது மற்ற ஐந்து ஆதாரங்களையும் தாங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், அந்த ஆதாரங்களுக்கு இதுவே அடிப்படையாக இருப்பதாலும் மூலாதாரமென இதை அறிஞர் அழைப்பர். எக்காரணத்தால் யாவற்றிற்கும் பூமியானது ஆதாரமாயுள்ளதோ, அதே போல இந்த மூலாதாரம் இல்லாவிடில் சரீரத்திற்கு ஹாநியாவது, மேலெழுச்சியாவது உண்டாகும்" என ருத்ரரஹஸ்யம் கூறும்.

3. மேலும் சிவஸம்ஹிதையில் ;—

" परिस्फुरद्वादिसान्तचतुर्वर्णं चतुर्दलम् ।
कुलाभिधं सुवर्णाभं स्वयंभूलिङ्गसङ्गतम् ॥
द्विरण्डोऽत्र सिद्धोऽस्ति डाकिनी यत्र देवता ।"
(शिव०-५६३)

"ஒளியுடன் விளங்குகின்ற இந்த ஆதாரத்தினுடைய நான்கு தளங்களிலும் கிழக்கு முதல் முறையே (வ.ச.ஷ.ஸ) என்ற நான்கு அக்ஷரங்களோடு கூடிய நான்கு தளங்களிலும், முறையே வரதா, ஸ்ரீ:, ஷண்டா, ஸரஸ்வதீ என்ற நான்கு தேவிகளும் வஸிக்கின்றனர் எனவும், இது 'குலம்' என்ற பெயருடன் பொன்னிறங்கொண்டு பொலிவுடன் ஸ்வயம்பூலிங்கத்தோடு சேர்ந்து திகழ்ந்து

கொண்டிருப்பது எனவும், அவ்விடத்திலேயே த்விரண்டன், என்ற ஸித்தனும் டாகிநீ என்ற சக்தி தேவதையும் வஸிக்கின்றனர் எனவும், இச்சக்தியையே யோகிகள் த்யாநம் செய்வர் எனவும்" வர்ணித்துள்ளது.

4. அந்த த்யாநமும் வருமாறு :

" मूलाधाराख्यपद्मे श्रुतिदललसितां पञ्चवक्त्रां त्रिणेत्रां
स्वर्णाभामस्थिसंस्थां सृणिमपि कमलं पुस्तकं ज्ञानमुद्राम् ।
बिभ्राणां बाहुदण्डैः सुललितवरदाद्यादियुक्तां मनोज्ञां
मुद्गान्नासक्तचित्तां मधुमदमुदितां भावयेद् डाकिनीं ताम् ॥'

"மூலாதார கமலத்திலே நான்கு தளங்களுடன் பிரகாசிக்கின்றவளும், மூன்று கண்களையுடையவளும், பொன்னிறத்துடன் பொலிகின்றவளும், அஸ்திகளை (எலும்பு) ஆஸநமாகக் கொண்டவளும், ஸ்ருணி, மாவெட்டி, தாமரைமலர், புஸ்தகம், ஞாநமுத்ரை இவைகளைக் கைகளில் தரித்துக்கொண்டு விளங்குபவளும், வரதா முதலிய அழகிய தேவிகளால் சூழப்பெற்றவளும், மநோஹரமாயிருப்பவளும் முத்கான்னத்தில் (வெண் பொங்கல்) ஆசை கொண்டவளும், மதுவை யருந்திய மதத்தால் புன்முறுவல் கொண்டவளுமான டாகிநீ என்ற சக்தியை த்யாநம் செய்யவேண்டும்" என்பதாகும்.

5. மற்றும், இந்த மூலாதாரத்திற்கு அகோரம் எனவும் ஓர் வழக்குண்டு. இந்த ஆதாரத்தினுடைய நான்கு தளங்களும் செந்நிறம் பொருந்தியவைகள். இதனுடைய கர்ணிகைகளில் முக்கோணம் ஒன்று உண்டு. அந்த முக்கோணமும் பின்புறமாகத் திரும்பி

யிருப்பதுமாகும். அதற்கு "காமா" என்ற பெயர். அதை யோநி எனவும் அறிஞர் அழைப்பர். அந்த யோநியும் இச்சை ஞாநம் க்ரியை என்ற மூன்று சக்திகளோடுகூடியது.

6. இக்கருத்தையே யோகதீபிகையும் வலியுறுத்தும். அது பின்வருமாறு:

"त्रिकोणं देहमध्यस्थं मूलाधारं विदुर्बुधाः ।"

"சரீரத்தின் நடுவேயுள்ள முக்கோணத்தை மூலாதாரமென அறிஞர் அழைப்பர்." எனவும்; சாக்தமத்திலும்;

"अघोराख्ये मूलचक्रे अतिरक्तचतुर्दले ।
वसान्तर्वर्णसंयुक्तं रक्तवर्णं मनोहरम् ॥
कर्णिकायां स्थिता योनिः कामाख्या परमेश्वरी ।
तद्योनिः परमेशानि इच्छाज्ञानक्रियात्मिका ॥
अपराख्यं हि कंदर्पमाधारे तत्त्रिकोणके ।
स्वयंभुलिङ्गं तन्मध्ये सरन्ध्रं पश्चिमाननम् ॥"

(शाक्त०)

"அகோரம் என்ற மூலசக்ரத்திலுள்ள நான்கு தளங்களும் சென்னிறத்துடன் பொலிவதாகும். அவைகளில் முறையே வகாரம் முதல் ஸகாரம் வரையிலுள்ள அழகிய நான்கு அக்ஷரங்களோடு கூடியதும், அக் கர்ணிகையிலேயே பரமேச்வரியானவள் காமா என்ற யோநி வடிவாயிருப்பவள். ஓ பரமேச்வரி! அந்த யோநியும் இச்சை ஞானம் க்ரியை என்ற மூன்று சக்தி வடிவங்களோடு விளங்குவதாகும். ஆதாரத்திலே அமைந்த அந்த

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE CHENNAI-4

முக்கோணத்தில் அபரம் என்ற கந்தர்ப்பனும், அதனுடைய நடுவில் த்வாரத்தோடு கூடியதும், பின்புறமாகத் திரும்பியிருப்பதுமான ஸ்வயம்பூலிங்கமும் இருப்பதாகும்." எனக் கூறப்பட்டுள்ளது.

7. மேலும்,

"तस्मिन्नाधारपाथोजे कर्णिकायां सुशोभना ।
त्रिकोणा वर्तते योनिः सर्वतन्त्रेषु गोपिता ॥"

(शिव०-२-२२)

"எந்த ஆதாரமென்ற தாமரையிலே நான்கு தளமுள்ள கர்ணிகையிலே இருக்கும் அழகிய முக்கோணமுள்ளதோ, அதை அறிஞர் யோநி என அழைப்பர். இந்த யோநியானது எல்லா தந்த்ரங்களிலும் மிகவும் ரஹஸ்யமாக வ்யவஹாரம் செய்யப்படுகின்றது" எனச் சிவஸம்ஹிதை சொல்லும்.

8. இப்பெருமை வாய்ந்த மூலாதாரத்தினுடைய முக்கோணத்திலேதான் குண்டலிநீ என்ற நாடியுமுள்ளது. இதற்குப் ப்ரமாணம் வருமாறு:

"तत्र विद्युल्लताकारा कुण्डली परदेवता ।
संवेष्टय सकला नाडीः सार्धत्रिवलयाकृतिः ।
मुखे निवेश्य स्वं पुच्छं सुषुम्ना विवरे स्थिता ॥"

(शिव०-५-५७)

"அந்த முக்கோணத்திலேதான் மின்னலைப் போன்ற ஒளியுடன் கூடிய வடிவத்துடன் குண்டலிநீ சக்தியென்ற நாடியானது இருக்கின்றது. அது எல்லா நாடிகளையும் சுற்றிக்கொண்டு ப்ரதக்ஷிணமாக மூன்றரை அங்குலச் சுற்றளவுள்ள வலய வடிவாக

Scanned by CamScanner

அமையப்பெற்று தனது வாலை வாயிலே கவ்விக் கொண்டு ஸுஷும்னையினுடைய த்வாரத்தினுள் விளங்குவதாகும்'' எனச் சிவஸம்ஹிதை கூறும்.

9. மற்றும் சில யோகிகளுடைய மதத்தில் குண்டலிநீ சக்தி என்ற நாடியானது மூன்றரைச் சுற்றளவுள்ளது அல்ல எனவும், அது எட்டுச் சுற்றளவுடன் அமைந்து விளங்கும் எனவும் சொல்லப் பெறுகின்றது. இக்கூற்றுக்குப் ப்ரமாணம் யாதெனில், யோகஸங்க்ரஹத்திலுள்ளது. அது வருமாறு—

''आधारे प्रथमे चास्मिन् तप्तचामीकरप्रभा ।
अष्टधा कुटिला नित्या शक्तिः कुण्डलिनी स्थिता ॥''

''முதல் ஆதாரத்திலே உருக்கிய பொன்னைப் போன்ற பொலிவுடன் திகழும் குண்டலிநீ சக்தியானது எட்டு வலயங்களாகச் சுற்றிக் கொண்டு எப்பொழுதும் நிலைத்து ஒளிருவதாகும்'' என்பது.

10. இவ்விதமுள்ள இரண்டு கொள்கைகளில் எது உண்மையென அறிந்து கொள்வது மிகவும் சிரமமான காரியமாகும். உபதேசமும் அப்யாஸமும் இல்லாமல் ஒன்றும் புலனாகாது என்பது தந்த்ரசாஸ்த்ரங்களுடைய முடிவாகும்.

11. இனி இக்குண்டலிநீ சக்தியின் நிலை எவ்விதமென்பதைச் சற்று சிந்தனைசெய்வோம். இக்குண்டலிநியானது எப்பொழுதும் உறங்கிக் கொண்டுள்ள நிலையையுடைத்து என தந்த்ரநூல்கள் கூறுகின்றன. அதாவது,

''सुप्ता नागोपमा ह्येषा स्फुरन्ती प्रभया स्वया ।
अहिवत्संधि संस्थाना वाग्देवी बीजसंज्ञिका ॥''

''இக்குண்டலிநீ ஸர்பத்தைப் போலச் சுருண்டு தன்னுடைய ஒளியினால் மிகுந்த பொலிவுடன் விளங்குவதாகும். மற்றும் பாம்பைப்போல பொந்தி (ஸந்தி)னுள்ளேயிருந்து கொண்டு வாக்தேவீ பீஜத்தையுடையது என்ற பெயரைப் பெற்று விளங்குவதாகும்'' எனக் கூறியிருப்பதும் சான்றாகும்.

12. இக்குண்டலிநீ சக்தியானது தன்னொளி கொண்டு பாம்பின் வடிவாக விளங்கும் காரணத்தால் சக்தியுபாஸகர்கள் இதனை வாக்தேவீ பீஜமான (ஐம்) எனவும் உருவகப்படுத்திச் சிந்தனை செய்வார்கள். இவ்விடத்தில் ஸுஷும்னையினுடைய த்வாரத்தைக் குண்டலிநியினுடைய உறைவிடமெனச் சொல்லியிருப்பது பொருத்தமாகாது. எனவே அதைச் சற்று விளக்க வேண்டியது அவசியமாதலால் விரிவாக இங்கு விளக்கப் பெறுகின்றது.

13. நமது சரீரத்திலே மூன்றைக் கோடி நாடிகளுண்டு. அவைகளில் முக்கியமானவை பத்து நாடிகளே என்றும், பதினொன்று நாடிகள் எனவும் இரண்டு கொள்கைகளுண்டு. இவைகளிலும் இடா, பிங்களா, ஸுஷும்நா என்ற மூன்றும் முக்கியமானவையாகும். குதத்திலிருந்து கழுத்துவரையிலும் சென்று கபாலத்தைத் தாங்கும் எலும்புத் தண்டிற்கு யோகசாஸ்த்திரங்களிலே மேருதண்டம் எனப் பெயர் வழங்கப் பெறும்.

14. அந்த மேருதண்டத்தினுடைய இடது பக்கத்

திலே சந்த்ர வடிவமாகவும், வெண்ணிறங் கொண்டதாகவும் விளங்குவது இடா என்ற நாடியாகும். அதை சக்தி யுபாஸகர்கள் சக்தி என அழைப்பர். இதேபோல அந்தமேருதண்டத்தினுடைய வலது பக்கத்திலே ஸூர்யவடிவாகவும், சென்னிறம் கொண்டதாகவும் விளங்குவது பிங்களா என்ற நாடியாகும். இதைச் சக்தி யுபாஸகர்கள் சிவன் என அழைப்பர். இவையிரண்டும்தான் முறையே பெண், ஆண் என்பதுமாகும்.

15. ஸுஷும்ணையானது மேருதண்டத்தினுடைய கீழுள்ள மூலாதாரத்திலிருந்து பரஹ்மரந்த்ரம் வரையில் செல்லுவதாகும். அது அக்நி வடிவாயமைந்தது. முற்கூறிய மூன்று நாடிகளும் குதத்திலிருந்து உண்டாகிய வீணாதண்டத்தை ஆச்ரயித்து (அடைந்து) இருப்பனவாகும்.

16. இக் கருத்தையே,

"मेरोरधःस्थिता या तु मूलाद्ब्रह्मरन्ध्रगा ।
सर्वतेजोमयी सा तु सुषुम्ना वह्निरूपिणी ॥
सुषुम्नान्तर्गता चित्रा चन्द्रकोटिसमप्रभा ।
सर्वदेवमयी सा तु योगिनां हृदयंगमा ॥
तस्या मध्ये ब्रह्मनाडी बिसतन्तुस्वरूपिणी ।
ब्रह्मरन्ध्रं तु तत्रैव सूक्ष्मात् सूक्ष्मतरंगवत् ॥"

(शिव०)

'யாதொரு நாடியானது மேருவுக்கு கீழே யிலங்கும் மூலாதாரத்திலிருந்து ப்ரஹ்மரந்த்ரம் வரையில் ஒளியுடன் செல்லுகின்றதோ, அந்த நாடியை ஸுஷும்ணை

யெனச் சொல்லுவர். அது அக்நிவடிவாய்த் திகழ்வது. அந்த ஸுஷும்ணையினுடைய நடுவே யிருப்பது சித்ரா என்ற நாடியாகும். அந்த சித்ராநாடியும் கோடி சந்த்ர ப்ரகாசம் கொண்டு ஸமஸ்த தேவவடிவாகவும் யோகிகளுடைய மநத்திற்கே புலனாவதும் ஆக விளங்குவதாகும். இத்தகைய சித்ரா நாடியினுடைய நடுவே தாமரைத் தண்டின் உள்ளேயுள்ள வெண்ணிறங் கொண்டு பொலிவுடன் துலங்கும் மெல்லிய நூலைப் போல ப்ரஹ்ம நாடியுமுள்ளது. ப்ரஹ்ரந்த்ரம் என்பதும் அவ்விடத்திலேயே மிகவும் நுண்ணியதாக ப்ரகாசிப்பதாகும்" எனச் சிவஸம்ஹிதையும் கூறும்.

17. எனவே ஸுஷும்ணையினுடைய நடுவிலே சித்ரா நாடியும், அதனுடைய நடுவிலே ப்ரஹ்ம நாடியும், இருப்பதாகக் கிடைக்கப் பெறுகின்றது. இந்த ப்ரஹ்ம நாடியேதான் குண்டலிநீசக்தி எனவும் அழைக்கப் பெறும். இப்பெருமை வாய்ந்த ஸுஷும்ணையினுடைய க்ரந்திகளில் (முடிச்சு) ஆறு சக்ரங்களும நிலை பெற்று விளங்குபவன. இக்கருத்தை யோகஸங்க்ரஹமும்;

"सुषुम्नाग्रन्थिसंस्थानि षट्चक्राणि यथाक्रमम् " (योग०)

—"ஸுஷும்ணையினுடைய முடிச்சுக்களிலே ஆறு சக்ரங்களும் முறையே அமைந்திருப்பனவாம்" என வலியுறுத்துப. ஏனெனில் குண்டலிநீசக்தி யிருக்கின்ற இடத்துக்குக் காமரூபம் எனப் பெயருள்ளதால் என்க.

18 யோகசிகோபநிஷத்தும்;

"यत्र कुण्डलिनी नाम पराशक्तिः प्रतिष्ठिता ।
तदेतत् कामरूपाख्यं पीठं कामफलप्रदम् ॥" (यो०शि०)

Scanned by CamScanner

—"எந்த இடத்தில் குண்டலிநீ சக்தியானது ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றதோ, அந்த சக்தியினுடைய இருப்பிடமும் காமரூபம் (பீடம்) என்ற பெயருடன் விளங்குவது. இக்காமபீடமும் உபாஸகர்களுக்கு ஸகல காமனைகளேயும் (விருப்பங்கள்) கொடுக்கவல்லது" என வர்ணிக்கும்.

19. யோகசூடாமண்யுபநிஷத்திலோ:

"आधारं प्रथमं चक्रं स्वाधिष्ठानं द्वितीयकम् ।
योनिस्थानं द्वयोर्मध्ये कामरूपं निगद्यते ॥" (यो०चू०)

—"ஆதாரம் முதல் சக்ரமாகும். ஸ்வாதிஷ்டாநம் இரண்டாவது சக்ரமாகும். இவ்விரண்டிற்கும் இடையே யோநி ஸ்தாந முள்ளது. அது காமரூபமென அழைக்கப் பெறுகிறது" எனக் கூறியுள்ளது முன்பு சொன்ன கூற்றுக்கு விரோதமாகவுள்ளது.

20. மேலும் இவ்விடத்தில் ஆதார ஸ்வாதிஷ்டாநங்களுடைய இடையேதான் காமரூப ஸ்தாநம் கல்பனை செய்யப் பட்டிருக்கின்றது. யோகசூடாமண்யுபநிஷத்திலும் குண்டலிநியினுடைய ஸமீபத்திலே எட்டுச் சுற்றளவு உள்ளதாகக் கல்பனை செய்யப்பட்டிருப்பது வருமாறு:

"कन्दोर्ध्वे कुण्डलीशक्तिरष्टधा कुटिलाकृतिः ।
ब्रह्मद्वारमुखं नित्यं मुखेनाछाद्य तिष्ठति ॥
येन द्वारेण गन्तव्यं ब्रह्मद्वारमनामयम् ।
मुखेनाछाद्य तद्द्वारं प्रसुप्ता परमेश्वरी ॥

प्रबुद्धा वह्नियोगेन मनसा मरुता सह ।
सूचीवद् गात्रमादाय व्रजत्यूर्ध्वं सुषुम्नया ।
(यो०चू० ३४-३९)

—"கந்தத்திற்கு மேலே (மூலம்) குண்டலிநீ சக்தியானது எட்டுச் சுற்றளவு கொண்டு வளைந்திருப்பதாகும். ப்ரஹ்ம த்வாரமென்ற ஸுஷும்னையை எப்பொழுதும் மூடிக்கொண்டிருப்பதுமாகும். எந்த ஸுஷும்னையினால் அழிவில்லாத ப்ரஹ்மரந்த்ரத்தை அடையத்தக்கதோ, அதை முகத்தினால் மூடிக் கொண்டு உறங்கியிருப்பதும் ஆம். இது யோகாப்யாஸம் இல்லாதவர்களுடைய நிலையாகும். உறங்குகின்ற அக்குண்டலிநியும் மநோமயகோசத்திலிருக்கின்ற வாயுவோடு கூடிய அக்நியினுடைய சேர்க்கையினால் விழித்துக்கொள்ளும். அப்பொழுது ஊசியைப் போல உடலைச் செய்து கொண்டு ஸுஷும்னையினூடே மேலே செல்வதும் ஆம்" என்பதாகும்.

21. இத்தகைய மூலாதாரத்தினுடைய கர்ணிகையிலேதான் ஸ்வயம்பூலிங்கமும் பின்புறமாகத் திரும்பியிருக்கின்றது.

"स्वयंभूलिङ्गं तन्मध्ये सरन्ध्रं पश्चिमाननम् ।
ध्यायेच्च परमेशानि शिवं श्यामलसुन्दरम् ॥
तेन मार्गेण कुण्डलिनी यातायातं करोति सा ।
भित्त्वा भित्त्वा पुरीं याति आयान्ती कुण्डली सदा ॥

तत्र विद्युल्लताकारां कुण्डली परदेवता ।
प्रसुप्तभुजगाकारा सार्धत्रिवलयरूपिणी ॥
शिवं वेष्ट्य महेशानि सर्वदा परितिष्ठति ।
येन मार्गेण गन्तव्यं ब्रह्मद्वारं निरामयम् ॥
मुखेनाच्छाद्य तद् द्वारं प्रसुप्ता परमेश्वरी । ''

—"அதனுடைய நடுவே ஸ்வயம்பூலிங்கமானது த்வாரத்தோடுகூட பின்புறமாகத் திரும்பி யிருப்பதாகும். ஓ பரமேச்வரி! இவ்விடத்தில் ச்யாமள வர்ணத்துடன் அழகாக விளங்கும் சிவனை த்யாநம் செய்யவேண்டும். எந்த வழியாகக் குண்டலிநியானது போக்குவரத்தைச் செய்துகொண்டு எப்பொழுதும் வெவ்வேறு நிலையிலே வந்துகொண்டும், சென்றுகொண்டும் இருக்கின்றதோ, அவ்விடத்தில் மின்னல் கொடியே போல பரதேவதையாம் குண்டலிநீசக்தியானவள் உறங்கும் பாம்பைப் போல மூன்றைச் சுற்றுக வளைந்துகொண்டு, ஓ மஹேச்வரி! எப்பொழுதும் சிவனைச் சுற்றிக்கொண்டு மிருப்பவள். எந்தவழியாகச் சிறந்த ப்ரஹ்மரந்த்ரத்தை யடைய வேண்டுமோ, அந்த வழியைத் தனது முகத்தினல் மறைத்துக் கொண்டு அந்த பரமேச்வரியானவள் உறங்கிக் கொண்டிருப்பவள்" எனச் சாக்தாகமங்கள் சொல்லும்.

22. மற்றும் இந்த மூலாதாரத்தினுடைய தளங்களிலே முன்பு சொல்லப் பெற்ற ரச்மிவடிவங்களான அக்நியினுடைய கலைகள் ஐம்பத்தாறும் இருப்பனவாம். இச்சிறப்பு வாய்ந்த ஆதாரத்திலே மதவேற்று

மையை யகற்றிய மஹாயோகிகள் வல்லபாதேவியோடு கூடிய மஹாகணபதியை த்யாநம் செய்கின்றனர். அந்த த்யாநமும் வருமாறு ;

"वशषसदलयुक्ते सम्यगाधारपद्मे
तरुणमरुणगात्रं वारणास्यं त्रिणेत्रम् ।
अभयवरदहस्तं चारुचापाङ्कुशोद्य-
त्करकमलसमेतं चिन्तयेद् विघ्नराजम् ॥ "

"வசஷஸ என்ற அக்ஷரங்களைக் கொண்ட நான்கு தளங்களோடு கூடிய மூலாதார கமலத்தில், இளமையும், சென்னிறத் திருமேனியும், யானை முகமும், மூன்று கண்களும், அபயம், வரதம், அழகிய பாசம், அங்குசம் இவைகளால் பொலிவுடன் துலங்கும் தாமரை போன்ற நான்கு கைகளையும் கொண்டு இடையூறுகளை யகற்றுவதில் இணையிலா அரசனைப் போன்ற வருமான ஸ்ரீமஹாகணபதியைச் சிந்தனை செய்யவேண்டும்" என்பதாகும்.

இவ்விதம் முதலாவது ஆதாரமாகிய
மூலாதார சக்ரத்தின் விளக்கம்
இவண் முற்றும்.

(2) ஸ்வாதிஷ்டாநம்

இரண்டாவது ஆதாரம் ஸ்வாதிஷ்டாநம் என்பதாகும். இது லிங்கத்தினுடைய அடிப்பக்கத்திலே இருப்பது. மணியைப் போன்ற மிக்க ஒளியுடன் இது மிளிருவதுமாகும்.

Scanned by CamScanner

2. இக்கருத்தை யோகசிகோபநிஷத்தும் பின் வருமாறு வர்ணிக்கும். அதாவது;

"स्वाधिष्ठानाह्वयं चक्रं लिङ्गमूले षडश्रकम्(யோ॰ஶி॰௭-௬௨)

—" ஸ்வாதிஷ்டநம் என்ற ஆறு இதழ்களுள்ள சக்ரமானது லிங்கத்தின் அடிப்பக்கத்திலே விளங்குவதாகும். இவ்விதமே யோகஸங்க்ரஹமும்;

"तस्याङ्गुलद्वयोत्सेधे तस्मान्मेढ्रपदे स्थितम् ।
स्वाधिष्ठानाह्वयं चक्रं चतुरश्रं मणिप्रभम् ॥ "

— அந்த மூலாதாரத்திற்கு மேலே இரண்டு அங்குலத்தில் இரத்தினம் போன்ற ஒளியுடன் விளங்கின்ற நான்கு தளங்களைக் கொண்டு ஸ்வாதிஷ்டாநம் என்னும் சக்ரமானது விளங்குவதாகும்" எனக்கூறும். ஆனால் இவ்விடத்தில் நான்கு தளங்கள் எனச் சொல்லியிருப்பது முன்பு சொல்லப் பெற்ற யோகசிகைக்கு முரண்பாடானது.

3. சிவஸம்ஹிதையிலோ;

"द्वितीयं तु सरोजं यल्लिङ्गमूलं व्यवस्थितम् ।
तद् वादिलान्तषड्वर्णं परिभास्वरषड्दलम् ॥
स्वाधिष्ठानाभिधं तत्तु पङ्कजं शोणरूपकम् ।
बालाख्यस्तत्र सिद्धोऽस्ति देवी यत्रास्ति राकिणी॥"(ஶி॰ஸ)

— லிங்கத்தின் அடியிலே யாதொரு இரண்டாவதான தாமரையுள்ளதோ. அது வ· ப· ம· ய· ர· ல· என்ற ஆறு அக்ஷரங்களோடு சுற்றிலும் ஒளியுடன்

திகழ்கின்ற ஆறு இதழ்களைக் கொண்டு விளங்குவதாகும். சென்னிறப் பொலிவுடன் விளங்கும் அத்தாமரையை அறிஞர் ஸ்வாதிஷ்டாநம் என அழைப்பர். அவ்விடத்தில் பாலன் என்ற ஸித்தனும், ராகிணீ என்ற தேவியும் வஸிக்கின்றனர்" என வர்ணிக்கப் பெற்றுள்ளது.

4. முன்னர் கூறப்பெற்ற ஆறு இதழ்களிலும் முறையே, பந்திநீ, பத்ரகாளீ, மஹாமாயா, யசஸ்விநீ, ரமா, லம்போஷ்டீ என்ற ஆறு தேவிகளும் வஸிக்கின்றனர்: சிவஸம்ஹிதாகாரர் இந்த ஸ்வாதிஷ்டாநத்தைச் சென்னிறம் கொண்டதாகச் சொல்லுவர். வேறு சிலரோ அஞ்ஜந (மை) வர்ணமென அழைப்பர். அதனுடைய தளங்கள் நீருண்டமேகத்திலே தோன்றும் மின்னல் எனத் திகழ்பவை எனவும் அவர்கள் கல்பனை செய்கின்றனர்.

5. இந்த ஆதாரமானது அக்நிதத்துவத்துடன் இணைந்து இலங்குவதாகும். இவ்விடத்திலே தான் குண்டலிநீ தானே அதிஷ்டாநமாகி (தலைமை) க்ரந்திகளைச் செய்து கொண்டிருப்பதுமாகும். எனச் சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதால் இந்த ஆதாரத்திற்கு ஸ்வாதிஷ்டாநம் என்ற வழக்கும் உண்டாகியது என்பர்.

6. யோகியானவன் தனது இடையருத பயிற்சியினால் இந்த ஆதாரத்திலுள்ள அக்நியை நன்கு ஜ்வலிக்கச் செய்யும் பொழுது உள்ளே உறங்கிக் கொண்டிருக்கின்ற குண்டலிநீசக்தியானது தன்னுணர்வைப் பெற்று, மூன்று முடிச்சுக்களையும் (க்ரந்திகள்) பிளந்து கொண்டு

Scanned by CamScanner

மேலே செல்லும் பொழுது த்வாதசாந்தத்தில் இருக்கின்ற சிவனோடு கூட உறைவதாகும்.

7. இக்கருத்தை அருணோபநிஷத்தானது (வெகு) அழகாக உருவகம் செய்துள்ளது. அது வருமாறு:

"यत् कुमारी मन्द्रयते, यद्योषित् यत्पतिव्रता ।
अरिष्टं यत् किंच क्रियते, अग्निस्तदनुवेधति ॥ "

—" எந்த ஸ்ரீசக்ரத்தில் குமாரீ என்ற அவஸ்தையைப் (நிலை) பெற்ற குண்டலிநியானவள் மந்த்ர (மெல்லிய) ஸ்வரத்தை (ஓசை) எழுப்புகின்றனளோ, எந்த ஸ்ரீசக்ரத்தில் பதியை வரணம் பண்ண விழையும் பதிவ்ரதையாம் குலமகள் மங்களவொலியை (தாரம்-உறத்தவொலி) எந்த நிலையிலிருந்து கொண்டு செய்கின்றனளோ, அச்சிறப்பு வாய்ந்த ஸ்ரீசக்ரத்தை அக்நிதேவனும் பின் தொடருகின்றான் என வர்ணிக்கப்பெறும்" இவ்விடத்தில் ஸ்ரீசக்ரம் என்னும் சொல்லுக்கு சரீரம் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

8. இவ்விதமே ஸுபகோதயத்திலும்;

" मनोमार्गं जित्वा मरुत इह नाडीगणजुषः
निरुध्यार्कं सेन्दुं दहनमपि संज्वाल्य शिखया ।
सुषुम्नां संयोज्य श्लथयति च षड्ग्रन्थिशशिनं
तवाज्ञाचक्रस्थं विलसति महायोगिसमयी ॥ "(सुभ० ३)

"இவ்விடத்தில் நாடிகளுடைய ஸமூஹத்தையடைந்த வாயுவினுடைய உதவியினால் மநோமார்க்கத்தை ஜயித்து, சந்த்ரனோடு கூடிய ஸூர்யனையும் தடுத்து,

மற்ற விவரங்களை எமது அருணோபநிஷத் தமிழுரையில் விரிவாகக் காணலாம்.

ஜ்வாலையினால் அக்நியையும் நன்கு ஒளிரச் செய்து, அதை ஸுஷும்னையோடு சேர்த்து, ஆஜ்ஞா சக்ரத்திலிருக்கின்ற ஆறு க்ரந்திகளையும் பிளந்து கொண்டு சந்த்ரனை ஸுஷும்னையுடன் சேர்த்து ஸமயீ என்ற மஹாயோகியானவள் லயத்தையடைகின்றாள் அன்றோ!" எனவும்;

" कुमारी यन्मन्द्रं ध्वनति च ततो योषिदपरा
कुलं त्यक्त्वा रौति स्फुरति च महाकालभुजगी ।
ततः पातिव्रत्यं भजति दहराकाशकमले
सुखासीना योषा भवसि भवसीत्काररसिका ॥"(सुभ० ६)

—" குண்டலிநியாம் குமாரியானவள் எந்த சக்ரத்தில் மந்த்ரஸ்வரத்தை (அவ்யக்தம்-புலனாகாதது அல்லது மெல்லியது) உண்டு பண்ணுகின்றாளோ, பிறகு தனது இருப்பிடத்தை விட்டு,எந்த குண்டலிநியானவள் மஹாகாலபுஜகீ என்ற வடிவத்துடன் செவிக்குப் புலனாகும் வண்ணம் மத்யமஸ்வரத்தையுண்டுபண்ணுகின்றாளோ, பிறகு அவளே தஹராகாச கமலத்தில் குலமகளாம் குண்டலிநியானவள் பதியை வரணம் பண்ணுகின்ற பாதிவ்ரத்யம் (பதிவிரதையின் தன்மை அல்லது கற்பிற்குரிய சிறந்த தன்மை) என்ற நிலையை யடைந்து ஸுகமாயிருந்து கொண்டு, பரமசிவனுடைய ஸீத்காரத்திலே திளைத்துக் கொண்டும் (ரஸித்துக் கொண்டு) ஓ அன்னையே! அத்தகைய பெருமைவாய்ந்தவளாக நீ இருக்கின்றாய் அன்றோ!" எனவும் சொல்லப்பெறும்.

10. மேலும் ருத்ரயாமளத்திலும்;

"प्रबुद्धा वह्नियोगेन समनानाम मारुता ।
ऊर्ध्वं नयेत् कुण्डलिनी जीवात्मसहितोपरि ॥ "

—ஸமநா என்ற வாயுவோடு கூடிய அக்நியினால் உந்தப் பெற்று விழிப்படைந்த குண்டலிநியை ஜீவாத்மாவோடு கூட மேலே செலுத்த வேண்டும் எனவும்;

யோககுண்டலிநீ என்ற உபநிஷத்திலும்;

"कुलयोषित् कुलं त्यक्त्वा परं चर्षणमेति सा ।
भुजगाकाररूपेण मूलाधारं समाश्रिता ॥
शक्तिः कुण्डलिनी नाम बिसतन्तुसमप्रभा ।
मूलकन्दं फणाग्रेण दष्ट्वा कमलकन्दवत् ॥
मुखेन पुच्छं संगृह्य ब्रह्मरन्ध्रं समाश्रिता ।
पद्मासनगतः स्वस्थो गुदमाकुञ्च्य साधकः ।
वायुमूर्ध्वगतं कुर्वन् कुम्भकाविष्टमानसा ।
वाय्वाकाशवशादग्निं स्वाधिष्ठानगतं ज्वलन् ।
ज्वलनाघातपनाघातैरुन्निद्रितोऽहिराट् ।
रुद्रग्रन्थिं ततो भित्वा विष्णुग्रन्थिं भिनत्त्यतः ।
ब्रह्मग्रन्थिं च भित्वैव कमलानि भिनत्ति षट् ।
सहस्रकमले शक्तिः शिवेन सह मोदते ।
सा चावस्था परा ज्ञेया सैव निर्वृतिकारणम् ।" (௬௰)

—"எவ்விதம் குலமகளானவள் தனது இருப்பிடத்தை விட்டுச் சிறந்த பதியை அணுகுவதற்கு விரும்பிச் செல்லுவளோ, அவ்விதமே தாமரைத் தண்டினுள்ளே

விளங்கும் மெல்லிய நூலைப்போல ஒளியுடன் விளங்குவதும், ஸர்பவடிவம் கொண்டு மூலாதாரத்தை நிலையாகக் கொண்டுள்ளதுமான அக் குண்டலிநீ என்ற சக்தியானது, தாமரைக்கிழங்கை எவ்வாறு தண்டானது பற்றிக் கொண்டிருக்கின்றதோ, அவ்வாறு தன்னுடைய வாயின் (படத்தின்) நுனியால் மூலாதாரத்தைக் கவ்விக் கொண்டு, தனது முகத்தினால் வாலைப் பற்றிய வண்ணம் ப்ரம்ஹரந்திரத்தோடு சேர்ந்து கொண்டு இயங்கிக் கொண்டிருப்பதாகும்.

11. "இந்நிலையிலேயுள்ள குண்டநியை யோகாப்யாஸம் செய்யும் யோகியானவன் கும்பகத்தால் சூழப் பெற்ற மநதோடு கூட வாயுவை மேலே எழும்பச்செய்து ஸ்வாதிஷ்டாநத்திலுள்ள அக்நியை வாயுவினுடைய உந்துததால் ஜ்வலிக்கச்செய்யும் பொழுது எழுகின்ற ஜ்வாலையினாலும், வாயுவினாலும் (காற்று) மோதும் பொழுது அங்கு உறங்குகின்ற அக் குண்டலிநீயானது அச் சமயம் விழிப்புற்று ப்ரஹ்மக்ரந்தியையும், விஷ்ணுக்ரந்தியையும், ருத்ரக்ரந்தியையும் முறையே பிளந்து கொண்டு, ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ரதள கமலத்திலே வதிகின்ற பரமசிவனோடு ஒன்றுவதாகும். இந்நிலையைத்தான் பரா நிலை எனவும், இதுவே தான் மோக்ஷத்திற்குக் காரணமாயுள்ள மார்கம் எனவும் யோகிகள் கருதுகின்றனர்" என்பது அக்குண்டலிநீயுபநிஷத்தின் தாத்பர்யமாகும்.

12 இந்த ஸ்வாதிஷ்டாநத்தில் மூலாதாரத்திற்குரியதான நான்கு தளங்களும், இது இரண்டாவது ஆதாரம் என்பதைக்குறிக்கின்ற இரண்டு தளங்களும்

ஆகச் சேர்ந்து ஆறுதளங்களுடன் சக்தியுபாஸகர்கள் மேதஸ் என்ற தாதுவைத் தனது இருப்பிடமாகக் கொண்ட காகிநீ என்ற தேவதையை த்யாநம் செய்கின்றனர்.

13. அந்த த்யாநமும் வருமாறு

"स्वाधिष्ठानाख्यपद्मे रसदललसित वेदवक्त्रां त्रिणेत्रां
पीताभां धारयन्तीं त्रिशिखगुणकपालाभयानात्तगर्वाम् ।
मेदोधातुप्रविष्टां मधुमदमुदितां बन्धिनीपूर्वशक्त्या
पीतां दध्यन्नसक्तामभिमतफलदां काकिनीं भावयेत्ताम् ॥"

—"ஆறு தளங்களுடன் விளங்கும் ஸ்வாதிஷ்டாநமென்ற, கமலத்தில் நான்கு முகங்களையுடையவளும், மூன்று கண்களைக் கொண்டவளும், மஞ்சள் நிறமுள்ளவளும், அக்நி, பாசம், (கயிறு) கபாலம், அபயம் என்றவைகளைக் கைகளில் தரித்திருப்பவளும், மேதஸ் என்ற தாதுவின் மீது அமர்ந்திருப்பவளும், மதுவைப் பருகும் பெருமிதத்தால் உண்டான மதத்தால் எழுந்த கர்வத்தின் காரணத்தால் தோன்றும் மகிழ்ச்சியையுடையவளும், பந்திநீ முதலிய சக்திகளால் சூழப்பெற்றவளும் தத்யந்நத்தில் (தயிர் அன்னம்) ப்ரியமுள்ளவளும், கோரிய பலன்களைக் கொடுப்பவளுமான அந்த காகிநீ தேவியை த்யாநம் செய்ய வேண்டும்" என்பதாகும்.

14. இவ்விடத்தில் அகந்தையைய கற்றிய யோகிகளோவெனில் ஸரஸ்வதீதேவியோடு கூடிய பரஹ்ம தேவனைத்யாநம் செய்வர். அந்த ப்ரஹ்ம தேவனுடைய த்யாநமும் வருமாறு;

"बममयरलसंज्ञैरक्षरैः क्लृप्तपद्मे
रुचिरमुपनिविष्टं पङ्कजे पद्मयोनिम् ।
अभयवरदहस्तं कुण्डिकामक्षमालां
दधतमनलवर्णं चिन्तयेद् विश्वयोनिम् ॥"

—"ब-म-म-य-र-ल என்ற அக்ஷரங்களோடு கல்பனை செய்யப் பெற்ற பத்மத்திலே காந்தியுடன் திகழ்கின்ற பத்மாஸனத்திலே அமர்ந்திருப்பவனும், அபயம் வரதம் கமண்டலு, (ஜலபாத்திரம், அக்ஷமாலை (ஜபமாலை) இவைகளை நான்கு கைகளில் தரித்துக்கொண்டிருப்பவனும், அக்நியைப் போன்ற ஒளியுடன் விளங்குபவனும், உலகத் தோற்றங்களுக்குக் காரணமாயிருப்பவனும் ஆன பரஹ்மதேவனைச் சிந்தனை செய்ய வேண்டும்" என்பதாகும்.

15. இந்த ஸ்வாதிஷ்டாநத்தில் அக்நியினுடைய கலைகள் ஐம்பதிரண்டும் இருப்பவனவாம். முன்பு கூறப்பெற்ற ஐம்பத்தாறு கலைகளோடு இவைகளையும் சேர்க்க நூற்றெட்டு கலைகளாகும். இக்கலைகள் யாவும் ரச்மிகள் கிரணங்கள்) என முன்பு விளக்கப் பெற்றுள்ளன. இந்த சக்ரத்தின் மேலே தான் அக்நியினுடைய இருப்பிடமும ஆகும். இவ்விடத்தை யோகிகள் ருத்ரக்ரந்தி எனவும் அழைப்பர்.

இவ்விதம் இரண்டாவது ஆதாரமாகிய
ஸ்வாதிஷ்டாநசக்ரத்தின் விளக்கம்
இவண் முற்றும்.

Scanned by CamScanner

(3) மணிபூரம்

1. மூன்ருவது ஆதாரம் மணிபூரமென்பது. இது ஸ்வாதிஷ்டானத்தைக் காட்டிலும் பத்தரை அங்குலம் மேலேயிருப்பது. இந்த மணிபூரமானது இரத்தினம் போன்ற காந்தியுடன் ஒளிருகின்றது என்பது மதாந்தமாகும். யோகஸங்க்ரஹமும்;

"सुषुम्नायां ततोऽप्यूर्ध्वे सार्धान्तरदशाङ्गुलम् ।
चक्रं दशदलं तत्र मणिपूरं रविप्रभम् ॥ "

—" ஸுஷும்னையின் மேலே பத்தரை அங்குலத்தில் பத்து இதழ்களுடன் ஸூர்யனைப் போன்ற ஒளியுடன் விளங்குவது மணிபூரமென்னும் சக்ரம்" எனக் கூறும்.

2. இந்த சக்ரத்தினுடைய இருப்பிடம் நாபிஸ்தானம் (தொப்பூழ்). இதற்குப் பத்து தளங்கள் உள்ளன. அத்தளங்களில் முறையே; ड ढ ण त थ द ध न प फ என்ற பத்து அக்ஷரங்களுண்டு. அவ்வக்ஷரங்களுக்குரிய தேவதைகளான, டாமரீ, டங்காரிணீ, ணமரீ, தாமஸீ, ஸ்தாண்வீ, தாக்ஷாயணீ, தாத்ரீ, நாராயணீ, பார்வதீ, ஷட்காரீ என்பவர்களும் அத் தளங்களில் முறையே வஸிக்கின்றனர். மற்றும் இந்த பத்து இதழ்களும் அவர்களுடைய இருப்பிடங்களை ஸூசனை செய்வதுமாகும்.

3. இது பொன்னிறத்துடன் பொலிவதும் ஆம். இதனுடைய கர்ணிகைகளிலே ருத்ரன் என்ற ஸித்தனும் லாகினீ என்ற தேவியும் வஸிக்கின்றனர். இக்கருத்தைச் சிவஸம்ஹிதையும்,

THE KUPPUSWAMY S...
RESEARCH INSTITUT...
31●●, R. H. ROAD, MADRAS.

"तृतीयं पङ्कजं नाभौ मणिपूरकसंज्ञकम् ।
दशारं डादिफान्तार्णशोभितं हेमवर्णकम् ॥
रुद्राख्यो यत्र सिद्धोऽस्ति सर्वमङ्गलदायकः ।
तत्रस्था लाकिनी नाम्नी देवी परमधार्मिका ॥" (शि०सं०)

—"நாபியிலே பொன்னிறத்துடன் பொலிவுற்று விளங்குகின்ற மூன்ருவது சக்ரமானது மணிபூரமென்பது. அது பத்து இதழ்கள் கொண்டது. அவ்விதழ்களில் ड காரம் முதல் फ காரத்தை இறுதியாகக் கொண்ட பத்து அக்ஷரங்களும் அமைந்துள்ளனவாம். அவ்விடத்திலே ஸகலமங்களங்களையும் கொடுக்க வல்ல ருத்ரன் என்ற ஸித்தனும் சிறந்த தர்மத்தின் வடிவாயமைந்த லாகினீ என்ற தேவியும் வஸிக்கின்றனர்." என வலியுறுத்தும்.

4. முன்பு கூறப்பெற்ற யோகத்தினுல் குண்டலினீ சக்தியானது சந்த்ரமண்டலத்திலிருந்து அமுதப் பெருக்கையுண்டுபண்ணும்பொழுது அவை மிகவும் நுண்ணிய திவலைகளாகச் சிதறிய இரத்தினங்களைப் போன்ற ஒளியுடன் இந்த ஆதாரத்தில் விழுகின்ற காரணத்தாலே இதற்கு மணிபூரம் என்ற பெயரும் வழங்கலாயிற்று

5. இவ்விடத்தில் சந்த்ராம்ருதம் என்னும் ஒரு வஸ்து உண்டு அது ஜீவராசிகள் அன்னபானங்களைச் செய்யும் பொழுது சங்கினீ என்ற நாடியினுடைய மேல்புறத்தில் உஷ்ணத்துடன் பொங்கி வழிந்து வருகின்ற

(சிரஸினுடைய வியர்வைத் துளிகளேயாகும். இக்கருத்தையே சிவஸம்ஹிதையும்:

"तथान्नपानसमये शङ्खिनी निर्गतोऽम च ।
प्रस्वेदो जायते मूर्ध्नि तदाहुरमृतं बुधाः ॥
विशुद्धचक्रं स्रवति सुषुम्नाध्यानतः शनैः ।
चन्द्राधिष्ठितं तस्मिन् गत्वा सान्द्री भवत्यलम् ॥
सान्द्रं बिन्दुनि भूत्वा तन्मणिपूरे पतत्यधः ॥" (शि० सं०)

—"அவ்விதமே ஜீவராசிகள் அன்னபானங்களைச் செய்யும்பொழுது சங்கினீ என்ற நாடியிலிருந்து வெப்பத்துடன் கூடிய வியர்வைத் துளிகள் சிரஸிலுண்டாகின்றன. அவைகளைப் பண்டிதர்கள் அமுதமென அழைப்பார். ஸுஷும்னையினுடைய வழியாக அவை விசுத்தி சக்ரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக விழுந்து கொண்டிருப்பனவாம். பிறகு அச்சக்ரத்திலிருந்து அதற்கு ஆதாரமான அநாஹதத்தை அத்திவலைகள் அடைந்து கனமாகத் தோய்வதாகும். பிறகு மிகவும் கனத்தன்மை வாய்ந்த பிந்துவாக மணிபூரத்திற்குள் இந்த அமுதமான கீழே விழுவதாகும்" எனச் சொல்லும்.

6. இந்த சக்ரமானது ஜலதத்துவத்துடன் கூடியது. இது நீலநிறங்கொண்டது என்பது பதாந்தரம். (வேறு மதம்) இச்சக்ரத்தில் ஸூர்ய கலைகள் அறுபத்து இரண்டும் இருப்பனவாம். குலயோகிகள் இந்த மணிபூரகத்தில் மாம்ஸதாதுவையிருப்பிடமாகக் கொண்ட அந்த லாகினீ தேவியை த்யாநம் செய்கின்றனர். லாகினீ தேவியினுடைய த்யாநமும் வருமாறு,

25027

"नाभौ दिक्पत्रपद्मे त्रिवदनविलसत् त्रीक्षणं रक्तवर्णं
शक्तिं दम्भोलिदण्डाभयमपि भुजैर्धारयन्तीं मनोज्ञाम् ।
डामर्याद्यैः परीतां पशुजनभयदां मांसधात्वैकनिष्ठां
गौडान्ने सक्तचित्तां सकलशुभकरीं संस्मरेल्लाकिनीं ताम् ॥"

—"பத்து தளங்களுடன் கூடிய நாபியிலுள்ள மணிபூரகத்தில் மூன்று முகங்களுடன் விளங்குகின்றவளும், சென்னிறங்கொண்டவளும், சக்தி, வஜ்ரம், தண்டம், அபயம் இவைகளைக் கைகளில் தரித்துக் கொண்டிருப்பவளும், அழகுள்ளவளும், டாமரீ முதலிய தேவிகளால் சூழப்பெற்றவளும், அறிவற்ற மக்களுக்கு அச்சத்தை விளைவிப்பவளும், மாம்ஸதாதுவைத் தனது முக்கியமான இருப்பிடமாகக் கொண்டவளும், குடான்னத்தில் (சர்க்கரைப்பொங்கல்) குறைவுறு ஆசை கொண்டவளும், ஸகலமங்களத்தையும் வழங்குபவளுமான லாகினீ தேவியைச் சிந்தனை செய்ய வேண்டும்." என்பதாம்.

7. அகந்தையை யகற்றிய யோகிகள், ஸ்ரீதேவீ பூமிதேவீ இவ்விருவர்களொடு கூடிய ஸ்ரீமஹாவிஷ்ணுவை இவ்விடத்தில் த்யாநம் செய்கின்றனர். இதற்கு ப்ரமாணமும் வருமாறு:

"डाद्यैः फान्तगतैः प्रकल्पितदले पद्मे निविष्टं हरिं
मार्ताण्डद्युतिमादिपूरुषमजं नारायणं चिन्मयम् ।
आताम्भोजगदारिशङ्खममलं पीताम्बरं कौस्तुभं
श्रीवत्साङ्कितमिन्द्रनीलसदृशं ध्यायेज्जगन्मोहनम् ॥"

Scanned by CamScanner

—"ஃகாரம் முதல் ஏகாரமீருகக் கல்பனை செய்யப் பெற்ற பத்து தளங்களுடன் கூடிய பத்மத்திலே அமர்ந்தவனும், ஒளியுடன் திகழும் ஆதவனைப்போன்ற பேரொலிவுறும் காந்திகொண்டவனும், ஆதிபுருஷனும், பிறப்பற்றவனும், சிந்மயவடிவம் கொண்டவனும், நாராயணன் என்ற திருநாமத்தைக் கொண்டவனும், கைகளிலே தாமரைமலர், கதை, சக்ரம், நிர்மலமான சங்கு இவைகளைத் தரித்துக்கொண்டிருப்பவனும், மஞ்சள் நிறமான வஸ்த்ரத்தையணிந்தவனும், கௌஸ்துபத்தையும், ஸ்ரீவத்ஸத்தையும் மார்பிலே அணிந்தவனும், இந்திர நீலக் கல்லின் ஒளியே போன்று திகழுகின்ற திருமேனியைக் கொண்டவனும், உலகை மோஹமடையச் செய்பவனும் ஆன ஸ்ரீஹரியைச் சிந்தனை செய்யவேண்டும்" என்பதாம்.

8. ஸமயிகளோவெனில், மணிபூரகசக்ரத்தில் விசேஷமாக ஸ்ரீதேவியைச் சிந்தனைசெய்வர். இதற்கு ப்ரமாணம் ஸ்ரீகௌடபாதரியற்றிய ஸுபாகோதயமாகும். அச்சிந்தனையும் வருமாறு ;

"तडिल्लेखामध्ये स्फुरति मणिपूरे भगवती
चतुर्धैक्यं तेषां भवति, च चतुर्बाहुरुदिता ।
धनुर्बाणान्निक्षूद्भवकुसुमजानङ्कुशशरं
तथा पाशं बिभ्रत्युदितरविबिम्बाकृतिरुचिम् ॥" (सुभ० १४)

"—சரீரத்தினுடைய நடுவேயுள்ள மணிபூரகசக்ரத்தில் ஒளியுடன் கூடிய மின்னல் கொடியே போன்று

அதனுடைய நடுவே ஸ்ரீதேவியானவள் ஒளியுடன் திகழ்ந்துகொண்டிருக்கின்ருள். ஸமயிகளுடைய நான்கு வகையான ஐக்யமும் இங்கு உண்டாகிறது. கரும்பாலான தநுஸையும்; புஷ்பங்களிலிருந்து உண்டாகியதுமான பாணங்களையும், அவ்விதமே கயிறு, மாவெட்டி இவைகளையும் தனது கைகளிலே தரித்துக்கொண்டிருப்பதால் நான்கு கைகளையும் இங்கு கூறப்பபெற்றது. உதயகாலத்திலே தோன்றுகின்ற ரவி பிம்பத்தைப்போன்ற ஆக்ருதியோடு அன்னை திகழ்கின்றவள்" எனவும்,

9. 'भवत्यैक्यं षोढा भवति भगवत्याः समयिनां
मरुत्वत्कोदण्डद्युतिनियुतभासा समरुचिः ।
भवत्पाणित्रातो दशविध इतीदं मणिपुरे
भवानि प्रत्यक्षं तव वपुरास्ते न हि परम् ॥" (सु० १५)

"—ஸமயிகளுக்கு பகவதியினுடைய ஆறுவகையான ஐக்யமும் இவ்விடத்தில்தான் உண்டாவதாம். இந்த்ரதநுஸைப்போல (வானவில்) பல வர்ணங்களோடு பெருகிய காந்திக்கு நிகரான காந்தியையுடைய உனது கைகளுடைய ஸமூஹமானது பத்து வகையாக அமைந்துள்ளது என்பது ஓ பவாநி! இப்பொழுது காக்ஷி கொண்டு திகழுகின்ற உனது சரீரம் மணிபூரகத்தைச் சார்ந்திப்பதாலன்ருே! இதைவிட வேறு ஒன்றுமில்லை யன்ருே!" எனவும்,

10. மற்றும் ;

''भवानि श्रीहस्तैर्वहसि फणिपाशं सृणिमथो
धनुः पौण्ड्रं पौष्पं शरमथ जपस्रक्शुकवरौ ।
अथ द्वाभ्यां मुद्रामभयवरदानैकरसिकां
क्वणद्वीणां द्वाभ्यां त्वमुरसि कराभ्यां च बिभृषे ॥''(सुभ. १६)

''—ஓ பவாநி ! காந்தியுடன் விளங்குகின்ற கைகளிலே நாகமென்னும் பாசத்தையும், பிறகு மாவெட்டியையும், கரும்பாலாகிய வில்லையும், புஷ்பங்களாலான சரத்தையும், சிறந்த அக்ஷமாலையையும், அழகிய கிளியையும், பிறகு இரண்டு கைகளிலே முறையே அபயமுத்ரையையும், வரமுத்ரையையும், தரித்துக் கொண்டு, தொழும்பன் விரும்பியதை வழங்குவதற்கு விழைவதிலே திளைத்து நிற்பவளும், மற்றும், ஒளியுடன் விளங்கும் வீணையையும் மார்பில் இருகரங்களினல் தரித்துக் கொண்டும் இருக்கின்ருய் அன்றெ ? எனவும் வர்ணித்துள்ளது.

11. மேலும் சக்தியுபாஸகர்களுக்கு மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம் என்ற இரண்டும் தாமிஸ்ரலோகமாகும். இவையிரண்டும் உபாஸனைக்குரியவை யல்லவாம். மணிபூரகம் முதல் ஸஹஸ்ராரம் வரையிலுமுள்ள ஐந்துசக்ரங்களே உபாஸனைக்குரியவைகளாகும். மணிபூரகத்தை யுபாஸிப்பவர்களுக்கு ஸாந்த்ருஷ்டிகம் என்ற தேவியினுடைய ஸாலோக்யமும், அநாஹதத்தை யுபாஸிப்பவர்களுக்கு ஸார்ஷ்ட்யம் என்ற ஸ்ருஷ்டி ஸாமர்த்யமும் (திறமை), விசுத்தியை யுபாஸிபப்வர்களுக்கு ஸாமீப்யமுக்தி என்ற அங்கஸேவையும், ஆஜ்ஞையை யுபாஸிபப்வர்களுக்கு ஸாரூப்யமுக்தியும், ஸஹஸ்ராரத்தை யுபாஸிப்பவர்களுக்கு என்றும் அழியா நிலையாம் ஸாயுஜ்ய முக்தியும் உண்டாவதாம். இவ்விதம் ஐவகை முக்திகளும் உபாஸகர்களுக்கு முறையே கிடைப்பனவென்பது ஸாரமாகும்.

12. இங்கு கூறப்பெற்ற ஐவகை முக்திகளுடைய விஸ்தாரமான விஷயவிளக்கங்களை ஆனந்தலஹரியினுடைய உரையாசிரியர்களில் ஒருவராகிய ஸ்ரீலக்ஷ்மீதராசார்யர் கூறியுள்ளார். அவைகளை எமது ஆனந்தலஹரீ தமிழுரையில் விஸ்தாரமாக விளக்கியுள்ளாதால் அங்கு கண்டு தெளிந்து கொள்ளத்தக்கது.

13. மேலும் மணிபூரகம் முதல் ஸஹஸ்ராரம் வரையிலுமுள்ள தாரணைகளுடைய வகைகளுக்கு முறையே, ·ஸ்ம்ருதி, புத்தி, ப்ரஜ்ஞா, மேதா, ஸம்வித் எனவும் பெயருண்டு. இந்த க்ரந்திகளிலுள்ள தளங்கள், ஆதாரத்தில் நான்கும், ஸ்வாதிஷ்டாநத்தில் ஆறுமாகச் சேர்ந்து பத்து தளங்களாயின என்பதையும் குறிப்பனவாம்.

இவ்விதம் மூன்ருவது ஆதாரமாகிய
மணிபூரகத்தின் விளக்கம்
இவண் முற்றும்.

(4.) அநாஹதம்.

1. நான்காவது ஆதாரம் அநாஹதமென்பது. இந்த அநாஹதமானது மணிபூரகத்திலிருந்து பதினன்கு அங்குலம் மேலேயிருப்பது. இதனுடைய இருப்பிடம் ஹ்ருதயமாகும். இதை ஹ்ருதயகமலம் என

Scanned by CamScanner

வும் அழைப்பர். இது மின்னல் கொடியே போன்று மெல்லியதாய் மிளிருவதாகும். இக்கமலம் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டு விளங்குவதுமாகும்.

2. யோகஸங்க்ரஹத்திலும்;

"चतुर्दशाङ्गुलोत्सेधात् ततो हृदयपङ्कजम् ।
दलैर्द्वादशभिर्युक्तं विद्युत्पुञ्जसमप्रभम् ॥" (यो. सं.)

"—மணிபூரகத்திலிருந்து பதினான்கு அங்குலம் மேலேயிருப்பது ஹ்ருதய கமலமென்னும் அநாஹதம். இது பன்னிரண்டு தளங்களைக் கொண்டது. மின்னல் கூட்டங்களுக்கு நிகரான காந்தியுடன் விள்ங்குவது" எனக் கூறப்பட்டுள்ளது.

3. இவ்விடத்தில் சப்தப்ரஹ்மமானது ஸ்வதந்த்ரமாகக் காணப்படுகின்ற காரணத்தால் இதற்கு அநாஹதம் என்ற பெயரும் வழங்கப்பெறுவதாம். இதற்குச் சான்று வருமாறு. கௌலாகமத்தில் ;

"शब्दब्रह्ममयः शब्दोऽनाहतस्तत्र शोभते ।
अनाहताख्यं तत्पद्मं योगिभिः परिकीर्तितम् ॥" (कौल.)

"—ஒலியின் வடிவாய்த் திகழும் சப்தப்ரஹ்மமானது அவ்விடத்தில் காணப்பெறுகின்ற காரணத்தால், அக்கமலம் யோகிகளால் அநாஹதமென அழைக்கப் பெறுகின்றது" எனவும் விளக்கம் கொடுக்கப்பெற்றுள்ளது.

4. மற்றும் இக்கமலத்தை பூர்ணகிரி எனவும் நூல்கள் கூறுகின்றன. அதாவது,

"तदेतत् पूर्णगिर्याख्यं पीठं कमलसंभव ।" (यो. शि.)

—"ஓ நான்முகனே! இந்த அநாஹதம் பூர்ணகிரிபீடம் என்ற பெயரையுமுடையது" என யோகசிகையின் வாக்யமாகும்,

5. இக்கமலத்தினுடைய பன்னிரண்டு தளங்களிலும், क-ख-घ-ङ-च-छ-ज-झ-ञ-ट-ठ என்ற பன்னிரண்டு அக்ஷரங்களுண்டு. அவைகளில் முறையே, காலராத்ரீ, (ख)காவித்ரீ,(ग)காயத்ரீ, (घ)கண்டாதாரிணீ, ஙார்ணு, சம்பா, (छ) சாயா, ஜயா, (झ) ஜங்காரீ, ஞானரூபா, டங்கஹஸதா, (ठ) டங்காரீ என்ற தேவதைகளுடைய இருப்பிடமுமாகும். இந்த அநாஹதத்தினுடைய கர்ணிகையில் விளங்கும் ஒளியினை பாணலிங்கம் என அழைப்பர்.

6. இக்கமலத்தினுடைய கர்ணிகையில் பிநாகீ என்ற ஸித்தனும், காகிநீ என்ற தேவியும் வஸிக்கின்றனர். சிலர் 'சோண' (சிவப்பு) வர்ணமாகவும், வேறு சிலர் பொன்னிறம் கொண்டதாகவும் கல்பனை செய்கின்றனர், மேலும் யாமளத்தில்;

"हृदये द्वादशदलैरनाहतसरोरुहम् ।
कादिठान्तदलं देवि तप्तहाटकसंनिभम् ॥
तन्मध्ये बाणलिङ्गं तु सूर्यायुतसमप्रभम् ।" (याम०)

—"அநாஹதமானது பன்னிரண்டு இதழ்களுடன் ஹ்ருதய ஸ்தானத்திலிருப்பது. அது क முதல் ठ வரையிலுள்ள பன்னிரண்டு அக்ஷரங்களையும், பன்னிரண்டு

Scanned by CamScanner

இதழ்களிலும் முறையே கொண்டு விளங்குவது. ஓ தேவி! உருக்கிய பொன்னைப்போல் பொலிவதுமாம். அக்கமலத்தின் நடுவே ஸூர்ய காந்தியைப்போல் பன்மடங்கு பெருகிய காந்தியுடன் திகழும் பாணலிங்கமுள்ளது'' எனவும் வர்ணிக்கப் பெற்றுள்ளது.

7. இக்கமலத்தை, சிவஸம்ஹிதையும்;

''हृदयेऽनाहतं नाम चतुर्थं पङ्कजं भवेत् ।
कादिठान्तार्णसंस्थानं द्वादशच्छदशोभितम् ॥
अतिशोणं वायुबीजप्रसादस्थानमीरितम् ।
पद्मस्थं तत्परं तेजो बाणलिङ्गः प्रकीर्तितः ।
सिद्धः पिनाकी यत्रास्ते काकिनी यत्र देवता ॥

(शि.सं. ८३-८५)

''—ஹ்ருதயத்தில் அநாஹதமென்ற நான்காவது கமலமுள்ளது. அக்கமலம் க முதல் ட வரையிலுள்ள அக்ஷரங்களைக் கொண்ட பன்னிரண்டு இதழ்களுடன் விளங்குவதாம். அது சென்னிறம் மிக்கதும், வாயு பீஜத்தோடு ஒளிருகின்ற இருப்பிடமாகவும் சொல்லப் பெறுவது. அக்கமலத்திலே ஒளிருகின்ற காந்தியைப் பாணலிங்கமெனப் பண்டிதர்கள் அழைப்பர். யாதொரு கமலத்தில் பிநாகீ என்ற ஸித்தனும் விளங்குகின்றானோ, எந்த பத்மத்தில் காகிநீ என்ற தேவியும் விளங்குகின்றாளோ, அதை அநாஹதமெனச் சொல்லுவர்'' எனச் சொல்லும்.

8. இச்சக்ரத்தில் ஸூர்யகலைகள் ஐம்பத்து நான்கும் இருப்பனவாம். முன்னர் மணிபூரகத்தில் கூறப்பெற்ற அறுபத்து இரண்டு கலைகளையும் இவைகளொடு சேர்க்க நூற்றுப் பதினாறு கலைகள் கிடைப்பனவாம். இதற்கு மேலேயுள்ளது ஸூர்யனுடைய இருப்பிடமாகும். இதை விஷ்ணுக்ரந்தி எனச் சொல்லுவர். இவ்விதமுள்ள ஹ்ருதய கமலத்தில் குலயோகிகள் காகிநீ என்ற தேவியைச் சிந்தனை செய்கின்றனர்.

9. அச்சிந்தனையும் வருமாறு;

''हृत्पद्मे भानुपत्रे द्विवदनविलसत् दंष्ट्रिणीं श्यामवर्णा-
मक्षं शूलं कपालं डमरुमपि भुजैर्धारयन्तीं त्रिणेत्राम् ।
रक्तस्थां कालरात्रिप्रभृतिपरिवृतां स्निग्धभक्तादिसंस्थां
श्रीमद्वीरेन्द्रवन्द्यामभिमतफलदां काकिनीं चिन्तयेचाम् ॥''

—''பன்னிரண்டு இதழ்களுடன் கூடிய ஹ்ருதய கமலத்திலே, இரண்டு முகத்துடனும், கோரைப்பற்களுடனும், கருத்த நிறத்துடனும், ஐபமாலை, சூலம், கபாலம் டமருகம் இவைகளைக் கைகளிலே கொண்டவளும், மூன்று கண்களையுடையவளும், ரத்த தாதுவின்மீது அமர்ந்தவளும், காலராத்ரீ முதலிய தேவதைகளால் சூழப்பெற்றவளும், நெய் கலந்த அன்னத்திலே அதிகப் பற்றுள்ளவளும், உபாஸகர்களான வீரர்களால் வணங்கப் பெற்றவளும், பக்தர்களுக்கு விரும்பியதை வழங்குபவளுமான காகிநீ தேவியைச் சிந்தனை செய்ய வேண்டும்'' என்பதாம்.

10. அகந்தையை யகற்றிய யோகிகளோவெனில், பார்வதியோடு கூடிய பிநாகியைச் சிந்தனை செய்கின்றனர். இதற்கு ப்ரமாணம் வருமாறு;

Scanned by CamScanner

''कार्यैठान्तगतैः प्रकाल्पितदले पङ्केरुहे पार्वती-
कान्तं कान्तशशाङ्ककेन सदृशं त्र्यक्षं कपर्दोज्ज्वलम् ।
शान्तं टङ्कमृगाक्षसूत्रवलयैर्युक्तं करे कङ्कणं
ग्रैवेयाङ्गदहारनूपुरधरं चर्माम्बरं चिन्तयेत् ॥''

''—க காரம் முதல் ठ காரம் இறுதியாக உள்ள அக்ஷ ரங்களால் கல்பனை செய்யப்பெற்ற பன்னிரண்டு இதழ்களுடன் கூடிய கமலத்திலே, அழகிய பிறைமதியைச் சூடிக்கொண்டு முழுமதியெனத் திகழ்கின்றவனும், மூன்று கண்களைக் கொண்டவனும், சடைமுடியுடன் விளங்குபவனும், சாந்த வடிவம் கொண்டவனும், டங்கம், ம்ருகம் (மான்) அக்ஷஸூத்ரம் இவைகளைக் கையில் தரித்தவனும், கங்கணம், (தோள்வலயம்) ஹாரம், காற்சிலம்பு இவைகளைத் தரித்தவனும், புலித்தோலை வஸ்த்ரமாகக் கொண்டவனுமாக, பரமசிவனைச் சிந்தனை செய்ய வேண்டும்''என்பதாம்.

11. இந்த அநாஹதமானது வாயுதத்துவத்துடன் விளங்குவது. இவ்விடத்தில் மணி பூரகத்திற்கு ப்ரகிருதியாகிய (அடிப்படையாக) பத்து தளங்களும், மூலத்திலிருந்து இரண்டு ஆதாரங்களுக்கும் மேலேயிருப்பதை ஸூசனை செய்கின்ற இரண்டு இதழ்களுமாகப் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டும் இது விளங்குவதாகும்.

12. ரஹஸ்யம்—மூலாதாரம் முதல் அநாஹதம் வரையிலுள்ள நான்கு சக்ரங்களைக் குறித்து இதுவரை விளக்கப் பெற்றது. இவைகளிலே மூலாதாரத்தில் ஸ்வாதிஷ்டாநமும், ஸ்வாதிஷ்டாநத்தில் மணிபூரமும்,

THE KUPPUSWAMI SAS
RESEARCH INSTITUTE
MYLAPORE CHENNAI-4

மணிபூரத்தில் அநாஹதமும், அநாஹதத்தில் விசுத்தியும், விசுத்தியில் ஆஜ்ஞையும், அமைந்திருப்பனவாம். மூலாதாரமானது இவைகளுக்கு மூலப்ரக்ருதியாக அமைந்துள்ளது. அதாவது மற்ற ஐந்து கமலங்களுக்கும் ஆதாரமாயிருப்பது என்பது கருத்து.

13. இக்கருத்தையே, ஸ்ரீபகவத்பாதாசார்யரும் ஸகலஜநநீஸ்தவத்தில் பின்வருமாறு கூறுவர். நான்கு தளங்களைக் கொண்ட மூலாதாரத்தினுடைய நடுவில் ஆறு தளங்களைக் கொண்ட ஸ்வாதிஷ்டாநமும், அதனுள் பத்து தளங்களைக் கொண்ட மணிபூரகமும், அதனுள் பன்னிரண்டுதளங்களுள்ள அநாஹதமும் அமைந்திருப்பதாகும் எனபர். அதற்கு மேலே மூன்று வலயம் என்றதால் ஸ்ரீசக்ரத்திலுள்ள மூன்று வலயங்களைக் குறிப்பதாகும். இம்மூன்று வலயங்களும், முறையே ருத்ரக்ரந்தி, விஷ்ணுக்ரந்தி, ப்ரஹ்மக்ரந்தி, என அழைக்கப் பெறும். ஆதாரகந்தங்களிலே இம் மூன்று க்ரந்திகளும் இருப்பனவாகும். அவைகளில் மூன்றுவதான ப்ரஹமக்ரந்தியினுடைய கீழ்பாகத்தில் விசுத்தியும், ஆஜ்ஞையும் அமைந்திருப்பனவாம்.

14. இவ்விதம் ஐந்து சக்ரங்களும் மூலசக்ரத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்குவனவாம். இக்காரணத்தால் மூலசக்ரத்தை ப்ருகிருதியெனவும் வழங்கலாயிற்று. அச்செய்யுளும், அதனுடைய பொருள் விளக்கமும் வருமாறு;

''चतुष्पत्रान्तः षड्दलपुटभागान्तस्त्रिवलय-
स्फुरद्विद्युद्वह्नियुमणिनियताभद्युतियुते ।

Scanned by CamScanner

षडश्रं भित्वादौ दशादलमथ द्वादशदलं
कलाश्रं च द्व्यश्रं गतवति नमस्ते गिरिसुते ॥''

—''ஓ மலையரசன் மகளே ! நான்கு தளங்களுள்ள மூலாதாரத்திலே ஆறு இதழ்களைக் கொண்ட ஸ்வாதிஷ்டானமும், அந்த ஸ்வாதிஷ்டானத்தில் பத்து இதழ்கள் கொண்ட மணிபூரகமும், அந்த மணிபூரகத்தில் பன்னிரண்டு இதழ்களுள்ள அநாஹதமும், அதனுள் மூன்று வலயங்களோடு ஒளியுடன் திகழ்கின்ற மின்னல் போன்ற அக்நி, ஸூர்யன் இவைகளைப் போன்ற பன்மடங்கு பெருகிய காந்தியுடன் நீ மூலாதாரத்திலிருந்து முதலில் ஆறு தளங்களையும், பிறகு பத்து தளங்களையும் அதற்குப் பிறகு பன்னிரண்டு தளங்களையும் முறையே பிளந்துகொண்டு செல்லுகின்றாயன்றோ! அச் சிறப்பு வாய்ந்த உனக்கு நமஸ்காரம்'' என்பதாகும்.

15. இவ்விடத்தில் ஸ்வாதிஷ்டானத்தினுடைய கர்ணிகையில் நான்கு தளமுள்ளது என யோகஸங்ரஹம் கூறுவது தவறு. மூலாதாரமொழிந்த எஞ்சியுள்ள ஐந்து கமலங்களுடைய ஐக்கியத்தை யநுஸரித்துச் சிலர் குண்டலிநீசக்தியை மூலாதாரத்திலும், மற்றுஞ் சிலர் ஸ்வாதிஷ்டானத்திலும் கல்பனை செய்கின்றனர். அவ்விதம் கற்பனை செய்வதும் குற்றமாகாது என்பதை அறிஞர் உணர்ந்துகொண்டு ஆராய்வது அவசியமாகும்.

இவ்விதம் நான்காவது ஆதாரமாகிய
அநாதஹதத்தின் விளக்கம்
இவண் முற்றும்.

25027

(5.) விசுத்தி.

ஐந்தாவது விசுத்தியென்பது. இக்கமலம் கண்டத்தில் (கழுத்து) அமைந்திருப்பது. தூம்ரவர்ணத்துடன்(புகை) திகழ்வது. அகாரம் முதல் அ: என்ற விஸர்கம் இறுதியாகவுள்ள. பதினாறு அக்ஷரங்களைக் கொண்டது. அவ்விடத்தில் ஜாலந்தரம் என்ற பீடமும் அமைந்துள்ளது.

1. இக்கருத்தை யோகசிகோபநிஷத்தும்;

''कण्ठकूपे विशुद्धाख्यं यच्चक्रं षोडशाश्रकम् ।
पीठं जालंधरं नाम तिष्ठत्यत्र सुरेश्वर ॥'' (यो. शि.)

—''ஓ நான்முகனே ! கழுத்தில் விசுத்தி என்ற யாதொரு சக்ரமுண்டோ, அது பதினாறு தளங்களைக் கொண்டு விளங்குவது. அவ்விடத்தில் ஜாலந்தரம் என்ற பீடமும் இருப்பதாகும்'' என வர்ணிக்கும்.

2. யோகஸங்ரஹத்திலோ,

''तस्मात् षडङ्गुलोत्सेधे शुद्धिचक्रमितीरितम् ।
दलैः षोडशाभिर्युक्तं स्वच्छस्फटिकसंनिभम् ॥'' (यो. सं.)

''—அநாஹத்திலிருந்து ஆறுஅங்குலம் மேலே விசுத்தியமைந்துள்ளது. அது பதினாறு இதழ்களோடு கூடியது, நிர்மலமான ஸப்டிகம் போன்ற காந்தியுடன் விளங்குவது''. எனக்கூறியுள்ளது.

Scanned by CamScanner

3. மேலும், இந்த விசுத்தியானது பொன்னிறங் கொண்டு பொலிவது என்பது மதாந்தரமாகும். வேறு சிலருடைய அபிப்பிராயத்தில் தூம்ரவர்ணம் (புகை) என்பதுமாகும். இவைகளுக்கு ப்ரமாணங்களையும் அவர்கள் காட்டுவர். அது வருவருமாறு.

"कण्ठस्थाने हि तत्पद्मं विशुद्धं नाम पञ्चकम् ।
सहेमाभस्वरोपेतं षोडशच्छदशोभितम् ॥
छगलाण्डोऽस्ति सिद्धोऽत्र साकिनी चाधिदेवता ।" (शि.सं. ५५.)

—" விசுத்தி என்ற ஐந்தாவதான அக்கமலமானது கண்டத்திலே அமைந்துள்ளது. அது பொன்னிறத்துடன் பொலிவது. பதினறு அக்ஷரங்களைக் கொண்டு பதினறு இதழ்களுடன் விளங்குவது. அவ்விடத்தில் சகலாண்டன் என்ற ஸித்தனும், ஸாகிநீ என்ற தேவியும் வஸிக்கின்றனர் எனச் சிவஸம்ஹிதை கூறும்.

5. யாமளத்தில் ;

"कण्ठदेशे विशुद्धाख्यं धूम्रवर्णं मनोहरम् ।
अकारादिस्वरोपेतैर्दलैः षोडशभिर्युतैः ॥" (याम०)

—"கண்டத்திலே யமைந்துள்ளது விசுத்தி என்ற கமலம். அது புகைவர்ணங் கொண்டு பொலிவுடன் மனதைக்கவரும் சக்திவாய்ந்ததாயமைந்துள்ளது அகாரம் முதல் அ: வரையிலுள்ள பதினறு அக்ஷரங்களையும் பதினறு இதழ்தகளில் கொண்டதாக விளங்வது" எனவும் கூறப்பட்டுள்ளது.

6. இக்கமலத்தினுடைய கர்ணிகையில் சகலாண்டன் என்ற ஸித்தனும், ஸாகிநீ என்ற தேவியும் வஸிக்கின்றனர். மற்றும், முறையே அம்ருதா, ஆகர்ஷிணீ, இந்த்ரா ஈசாநீ, உமா, ஊர்த்வகேசீ, ரித்திதா, ரிபா, லுதா, லூதா, ஏகபாதா, ஐச்வர்யதா, ஓம்காரீ, ஔஷதாத்மிகா, அம்பிகா, அக்ஷரா என்ற பதினறு பரிவாரதேவதைகளுடைய இருப்பிடங்களையும் இது ஸூசனை செய்வதாகும்.

7. இக்கமலத்தில் ஹம்ஸவடிவான பரமாத்மாவைப் பார்த்து ஜீவன் பரிசுத்தமடைவதால் இதற்கு விசுத்தி எனவும் பெயர் வழங்கலாயிற்று. இதற்கு ப்ரமாணமும் வருமாறு:

"विशुद्धिस्तन्यते यस्मात् जीवस्य हंसलोकनात् ।
विशुद्धमिदमाख्यातमाकाशाख्यं महाद्भुतम् ॥" (यो. दी.)

—"எக்காரணத்தால் மலினமடைந்த (அழுக்கு) ஜீவனுக்கு ஹம்ஸத்தினுடைய கடாக்ஷத்தினல் பரிசுத்தத் தன்மை யுண்டாகின்றதோ. அக்காரணத்தாலே தான் இக் கமலம் விசுத்தி எனவும் அழைக்கப் பெறுவது. இதை மிகவும் வியப்புடன் கூடிய ஆகாய மெனவும் அறிஞர் சொல்லுவர். என்பது யோகதீபத்தினுடைய வசனமாகும்.

8. மற்றும் இக்கமலம் ஆகாயத்துடன் இணைந்திருப்பதுமாகும். இவ்விடத்தில் சந்த்ரனுடைய கலைகள் எழுபத்து இரண்டும் விளங்குவனவாம். குலயோகிகள் இவ்விடத்தில் ஸாகிநீ என்ற தேவியைச் சிந்தனை செய்வர்.

Scanned by CamScanner

9. அச்சிந்தனையும் வருமாறு :

''ग्रीवाकूपे विशुद्धौ स्वरदलकमले रक्तवर्णां त्रिणेत्रां
श्रीखट्वाङ्गं कपालं त्रिशिखमपि महाचर्म संधारयन्तीम् ॥
वक्त्रेणैकेन युक्तां पशुजनभयदां पायसान्ने प्रसक्तां
त्वक्स्थां वन्देऽमृताद्यैः परिवृतवपुषं साकिनीं भावयेत्ताम् ॥''

—''பதினாறு இதழ்களுடன் கண்டத்திலமைந்த விசுத்தி என்ற கமலத்தில் சென்னிறத்துடன் பொலிகின்றவளும், மூன்று கண்களையுடையவளும், எலும்பாலாகிய தண்டம், கபாலம், சூலம் பெரியகவசம் இவைகளை முறையே நான்கு கைகளில் தரித்திருப்பவளும், ஒரு முகத்தைக் கொண்ட வளும், அறிவற்ற மக்களுக்கு அச்சத்தை விளைவிப்பவளும், பாயஸான்னத்தில் பற்றுள்ளவளும், த்வக்தாதுவின் மீது அமர்ந்துள்ளவளும், அம்ருதா முதலிய பதினாறு சக்திகளால் சூழப்பெற்ற சரீரத்தையுடையவளுமான அந்த ஸாகிநீ தேவியைச் சிந்தனை செய்ய வேண்டும்:'' என்பதாம்.

10. அகந்தையையகற்றிய போகிகளோவெனில், இக்கமலத்தின் ஜீவாத்மாவைச் சிந்தனை செய்வர். அச்சிந்தனையும் வருவாறு:

''मूर्तिं चाङ्गनिविष्टमङ्गरहितं शान्तं त्रिधामास्पदं
व्याप्ताशेषचराचरं गुणगुणं भावैकसच्चिन्मये ।
मूर्तामूर्तममेयमूर्तिममलं ज्योतिःप्रदीपोज्ज्वलं
साक्षात् षोडशवर्णपत्रकमले जीवं परं चिन्तयेत् ॥''

''பரமாத்மாவினுடைய மடியிலே அழகிய வடிவத்துடன் அமர்ந்திருப்பதும், (ஆனால்) அவயவமற்றதாயிருப்பதும், சாந்தவடிவம் கொண்டதும், மோக்ஷத்திற்குக் காரணமாயுள்ளதும், நான்கு திசைகளிலும் பரவியுள்ளதும், குணங்களுக்கெல்லாம் குணமாயிருப்பதும், பாவனைகளே முக்ய இலக்காயிருப்பதும், ஸத் சித் என்ற இவைகளுடைய வடிவாயமைந்ததும், உருவம் கொண்டதும், உருவமற்றதாயு மிருந்துகொண்டு ப்ரமாணங்களுக்குப் புலனாகாத வடிவத்துடன் திகழ்வதும், பரிசுத்தமானதும், ஒளிப்பிழம்பாம் தீபமெனத் திகழ்வதும், ஆன ஜீவனைப் பதினாறு அக்ஷரங்களைக்கொண்டு, பொலிவுடன் துலங்குகின்ற பதினாறு இதழ்களைக் கொண்ட கமலத்திலே உறுதியுடன் சிந்தனை செய்யவேண்டும்'' என்பதாம்.

11. இக்கமலம், அநாஹத்திற்குக் காரணமாயுள்ள பன்னிரண்டு இதழ்களோடு, தனக்கு கீழேயுள்ள நான்கு ஆதாரங்களையும் குறிப்பிடுகின்ற நான்கு இதழ்களையும் சேர்க்க பதினாறு இதழ்களுடன் விளங்குவதாகும்.

இவ்விதம் ஐந்தாவது ஆதாரமாகிய
விசுத்தியின் பொருள் விளக்கம்
இவண் முற்றும்.

(6) ஆஜ்ஞா சக்கரம்

1. ஆறுவது ஆஜ்ஞை யென்பது. இது இரண்டு புருவங்களுக்குமிடையே அமைந்துள்ளது. விசுத்தியிலிருந்து ஒன்பது அங்குலம் மேலேயுள்ளது நீலநிறம் கொண்டு விளங்குவது.

25027

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTI... E
MYLAPORE CHENNAI-4

2. இக்கருத்தை யோகஸங்க்ரஹமும் :

"तस्मात् नवाङ्गुलेऽसेचे भ्रूमध्ये सुषिरं महत ,
अज्ञाचक्रं महानीलद्युति च द्विदलात्मकम् ॥" (यो० सं०)

"—அநாஹதத்திலிருந்து ஒன்பது அங்குலம் மேலே இரண்டு புருவங்களுக்குமிடையே நிலைத்த ஒளியுடன் ஒளிருவது ஆஜ்ஞை யென்னும் கமலம். இது நீல நிற முள்ளது இரண்டு இதழ்களைக் கொண்டு விளங்குவது. அந்த இதழ்களில் இரண்டு அக்ஷரங்கள் அமைந்துள்ளன" எனச் சொல்லும்.

3. இந்த ஆஜ்ஞைக்கு மேலே ஓட்யாண பீட முள்ளது. அதாவது ;

"अज्ञानाम भ्रुवोर्मध्ये द्विदलं चक्रमुत्तमम् ।
ओड्याणाख्यं महापीठमुपरिष्टात् प्रतिष्ठितम् ॥" (यो० शि०)

—"இரண்டு புருவங்களுக்குமிடையில் ஆஜ்ஞை யென வழங்குகின்ற சிறந்த சக்ரமுள்ளது. அது இரண்டு இதழ்களைக் கொண்டு விளங்குவது. அச்சக்ரத்தில் ஓட்யாணம் என்ற மஹாபீடமும் உள்ளது." என யோகசிகையும் கூறும்.

4. இக்கமலத்திலே, மஹாகாலன் என்ற ஸித்த னும், ஹாகிநீ என்ற தேவியும் வஸிக்கின்றனர். கமலத்தி னுடைய கர்ணிகையில் இயங்கும் ஒளியை துரீயலிங்க மென அழைப்பர். இது பொன்னிறம் கொண்டு பொலி வுடன் விளங்குமென்பது மதாந்தரம். (வேறு சிலருடைய அபிப்பிராயமாகும்.)

5. சிவஸம்ஹிதையோவெனில் ; இது வெண்

ணிறங் கொண்டு விளங்குமெனச் சொல்லும், அது வருமாறு:—

"आज्ञायां तु भ्रुवोर्मध्ये हक्षोपेतं द्विपद्मकम् ।
शुक्लाभं तन्महाकालः सिद्धो देव्यत्र हाकिनी ॥
तुरीयं त्रितयं लिङ्गं तत्राहं मुक्तिदायकः ।"
(शि० सं० ५-९६, ९८)

—"ஆஜ்ஞையென்னும் கமலம், புருவத்தினிடையே ஹக்ஷ என்ற இரண்டு அக்ஷரங்களைக் கொண்டு இரண்டு இதழ்களுடன் திகழ்வதாகும். அது வெண்ணிறம் கொண்டது. அவ்விடத்தில் மஹாகாலன் என்ற ஸித்தனும். ஹாகிநீ என்ற தேவியும் விளங்குகின்றனர். அக்கமலத்தினுடைய கர்ணிகையில் உண்டாகும் ஒளியை முக்தியைக் கொடுக்கவல்ல மூன்றுருவதான துரீயலிங்கம் என அழைப்பர்." என்பர்.

6. மேலும் யோககுண்டலிநீ உபநிஷத்தும்:

"आज्ञानाम भ्रुवोर्मध्ये चक्रं तु द्विदलं परम् ।
हक्षद्वयक्षरसंयुक्तं निर्मलं सुमनोहरम् ॥
तुरीयाख्यं महालिङ्गं तन्मध्ये काञ्चनप्रभम् ।
आज्ञासंक्रमणं तत्र गुरोराज्ञेति कीर्तितम् ॥" (यो० कु०)

"ஆஜ்ஞை என்ற கமலமோவெனில், இரண்டு புருவங்களுக்கு மிடையே ஹ, க்ஷ என்ற இரண்டு அக்ஷரங்களைக்கொண்டு இரண்டு இதழ்களுடன் விளங்கு வதாகும். அது தூய்மையுடன் மனதைக் கவர்வதாயும் விளங்குவது. அதனுடைய் கர்ணிகையில் துரீய மென்ற பெயருடன் மஹாலிங்க மொன்று பொன்னிறத்துடன்

பொலிவதாகும். இக் கமலத்திலிருந்து ஸ்ரீ குருவினுடைய ஆஜ்ஞை (கட்டளை) உபாஸகர்களுக்கு உண்டாவதால் இதற்கு ஆஜ்ஞை என்ற பெயரும் வழங்கலாயிற்று.'' எனவும் கூறும்.

6. முன்னர் கூறப்பெற்ற இரண்டு அக்ஷரங்கள் கொண்ட இக்கமலத்தினுடைய இரண்டு இதழ்களிலும் முறையே ஹம்ஸேச்வரீ, க்ஷமா என்ற இரண்டு தேவிகளும் வஸிக்கின்றனர்.

இதற்குக் கீழே 'இது முதற் கொண்டு விளங்குகின்ற ஆறு ஆதாரங்களையும் (அதாவது கீழேயுள்ள ஆதாரம் ஆறு) ஸூசனை செய்கின்ற ஒரு தளமும், இதற்கு மேலே விளங்குகின்ற ஆறு ஆதாரங்களையும் (அதாவது மேலே யுள்ள ஆதாரம் ஆறு' ஸூசனை செய்கின்ற மற்றொரு தளமும் சேர்ந்து இரண்டு தளங்களைக் கொண்டு சிறந்து விளங்குவது இக் கமலம் என்பது ஸாரம்.

7. இவ்வாறு இங்கு குறிக்கப்பெற்ற மேல் ஆதாரங்கள் ஆறும் வருமாறு; கைலாஸம் (1) போதிநீ (2) கலா (3) நாதம் (4) சக்தி (5) ஸஹஸ்ராரம் (6) என்பன. இவைகளில் ஸஹஸ்ராரத்தை நீக்கி கைலாஸம் முதலிய எஞ்சிய ஐந்தும் நெற்றியிலிருப்பனவாம்.

8. இவ்விடத்தை யோககுண்டலிநியும் பின்வருமாறு உருவகம் செய்துள்ளது.

''कैलासाख्यं तदूर्ध्वे तु बोधिनी च तदूर्ध्वतः ।
पीठत्रयं ततश्चोर्ध्वे निरुक्तं योगचिन्तकैः ॥
तद्बिन्दुनादशक्त्याख्यं फालपद्मे व्यवस्थितम् ।'' (யோ० கு०)

''—அதற்கு மேலே கைலாஸமென்பதும், அதற்கு மேலே போதிநியும், அதற்கும் மேலே கலையும், முறையே அமைந்துள்ளது எனவும், இவைகளுக்கும் மேலே மூன்று பீடங்கள் அமைந்துள்ளன எனவும், அப்பீடங்களைச் சார்ந்து முறையே நாதம், பிந்து, சக்தி என்ற இவைகள் அமைந்துள்ளன எனவும் யோகமுணர்ந்த அறிஞர் கூறுவர். எனவே இவைகள் யாவும் பால பத்மத்தில் (நெற்றிக் கமலத்தில்) திகழ்வனவாம்:

9. இக்கமலத்தில் சந்த்ரனுடைய கலைகள் அறுபத்து நான்கு உள்ளன. முன்பு கூறப்பெற்ற விசுத்தியினுடைய எழுபத்திரண்டு கலைகளையும், இவைகளுடன் சேர்க்க நூற்றுமுப்பத்தாறு கலைகள் கிடைப்பனவாம். எனவே மூலாதாரம் முதல் ஆஜ்ஞை வரையிலும் அமைந்த அக்நி, ஸூர்யன், ஸோமன் என்ற இம்மூவருடைய கலைகளும் சேர்க்க முந்நூற்று அறுபது எனவும் கிடைப்பதாகும். இக் கலைகள் யாவும் வர்ஷவடிவா யமைந்துள்ளனவாம். இவ்வரலாறு நூலின் துவக்கத்திலே கூறப்பெற்றுள்ளது.

10. இவைகளுக்கு மேலே சந்த்ரனுடைய இருப்பிடமுள்ளது. இதை ப்ரஹ்மரந்த்ரம் என அழைப்பர். இவ்விடத்தில் சாக்த யோகிகள் ஹாகிநீ என்ற தேவியைச் சித்தனை செய்வர்.

11. அச்சிந்தனையும் வருமாறு:

''भ्रूमध्ये बिन्दुपद्मे द्विदलविलसिते शुक्लवर्णां कराब्जै-
बिभ्राणां ज्ञानमुद्रां डमरुककमलान्यक्षमालां कपालाम् ।
षड्वक्त्रां मज्जसंस्थां त्रिनयनलसितां हंसवत्याद्युक्तां
हारिद्रान्ने प्रसक्तां सकलसुरनुतां हाकिनीं भावयेत्ताम् ॥''

Scanned by CamScanner

"—புருவங்களுக்கிடையே இரண்டு இதழ்களுடன் விளங்குகின்ற பிந்து பத்மத்தில் வெண்ணிறத்துடன் விளங்குகின்றவளும், ஞானமுத்ரை, டமருகம் அக்ஷமாலே, கபாலம் இவைகளைக் கைகளில் தரித்திருப்பவளும், ஆறுமுகங்களைக் கொண்டவளும், மூன்று கண்களையுடையவளும், ஹம்ஸவதீ, க்ஷமா என்ற இரண்டு தேவிகளால் சூழப்பெற்றவளும், ஹரித்ரான்னத்தில் ஆசையுள்ளவளும், யாவராலும் போற்றப்படுகின்றவளும் ஆன அந்த ஹாகிநீ தேவியைச் சிந்தனை செய்யவேண்டும்." என்பதாகும்.

12. அகந்தையையகற்றிய யோகிகள் இந்த பிந்து ஸ்தானத்தில் பரமாத்மாவைச் சிந்திப்பர். அச்சிந்தனையும் வருமாறு:

"हक्षाभ्यां परिकॢप्तपत्रकमले दिव्ये जगत्कारणे
स्वच्छात्मानमनेकदेहनिलयं स्वच्छन्दतः सर्वदा ।
तत्तद्योग्यतया स्वदेशिकतया भावैकसच्चिन्मया
प्रत्यक्षाक्षरविग्रहं परपदं ध्यायेद् गुरुं शाश्वतम् ॥"

"—ஹகாரக்ஷகாரங்களால் கல்பனை செய்யப்பெற்றதும், உலகத்தோற்றத்திற்கு மூலகாரணமாயுள்ளதும், மங்களவடிவாயமைந்ததும் ஆன இக் கமலத்தில் அளவற்ற தோற்றங்களுக்கு ஆதாரமாயுள்ளதும், நிர்மல வடிவத்துடன் திகழ்வதும், எப்பொழுதும் ஸ்வதந்த்ரத்துடன் இருப்பதும், பல திறப்பட்ட வடிவங்களுக்கு இருப்பிடமாயுள்ளதும், அந்த அந்த கர்ம பலன்களுடைய வாஸனைகளுக்குரிய தகுதியுடன விளங்குவதும், தனது தேசிகத்தன்மையினால் ஸத் சித் என்ற வடிவத்தோடு

சிந்தனைக்கே புலனுயுள்ளதும், நேரில் காக்ஷிகொடுக்கின்ற நித்ய சரீரத்துடன் விளங்குவதும், தலைசிறந்த நிலைத்த இருப்பிடத்தைக் கொண்டதுமான ஸ்ரீகுரு வடிவாய்த் திகழும் அந்த ஹம்ஸத்தைச் சிந்தனை செய்ய வேண்டும்." என்பதாம்.

13. மற்றும், ஆஜ்ஞைக்கு மேலேயுள்ள ஆறு ஆதாரங்களை வெளிப்படையாகவும், குறிப்பாகவும், விளக்குகிற நூல்கள் பலவிருப்பினும், அவைகளுடைய விளக்கங்களை ஸ்ரீகுருவினுடைய உபதேச பொருள் வாயிலாக அறிந்துகொள்ளவேண்டு மென்பது சாஸ்த்ரங்களுடையவும், நமது முன்னோர்களான மஹர்ஷிகளுடையவும் கட்டளையாகும். ஆதலின் அக் காரணம் கருதி இங்கு அவைகள் விளக்கம் பெறவில்லை.

இவ்விதம் ஆருவது ஆதாரமாகிய
ஆஜ்ஞாசக்ரத்தின் விளக்கம்
இவண் முற்றும்.

(7) ஸஹஸ்ராரம்.

1. இக்கமலம் தாலுவினுடைய அடியிலே அமைந்திருப்பது. இது பல நிறங்களுடன் பொலிவதுமாம். மற்றும் ஸகல தேவதைகளுடைய வடிவாகவும் திகழ்வது என அறிஞர் சொல்லுவர். ஆயினும். இது கீழ முகமாயிருப்பினும் மற்ற ஆதாரங்களைப் போலவே இது மேல் நோக்கியிருப்பதுமாகும்.

2. இக்கருத்தை ஆஜபாவிதாநமும் பின் வருமாறு விளக்கம் கொடுக்கும். அது வருமாறு:

"मस्तादूर्ध्वमधोमुखं विकसितं पद्मं सहस्रच्छदम्"

—" அதற்கு மேலே ஸஹஸ்ராரமானது கீழ்நோக்கிய முகத்துடன் நன்கு மலர்ந்த தாமரை மலர் போல ஆயிரம் இதழ்களுடன் விளங்குவதாகும்." என்பது. இக்கமலம் குங்குமத்தைப்போன்று சென்னிறத்துடன் திகழ்வது என்பது மதாந்தரமாகும்.

3. மற்றும், இக்கமலத்தைக் குறித்து யோககுண்டலினியும்:

" अत ऊर्ध्वं तालुमूले सहस्रारं सुशोभनम् ।
अस्ति तत्र सुषुम्नाया मूलं सविवरं स्थिरम् ।
तालुमूले सुषुम्ना स्यादधोवक्त्रं प्रवर्तते ॥ " (यो० कु०)

"—அதற்கு மேலே தாலுவினுடைய அடியிலே அழகுடன் விளங்கும் ஆயிரம் இதழ்கள் கொண்ட ஸஹஸ்ராரம் என்ற கமலமுள்ளது. எவ்விடத்தில் ஸுஷும்னையினுடைய மூலமானது (அடிபக்கம்) த்வாரத்தோடு கூடியதாயிருக்கின்றதோ, அங்கு தாலுவின் அடியிலே ஸுஷும்னையும் கீழ் நோக்கிய முகத்தோடு இருப்பதுமாகும்" எனக்கூறும்.

4. மேலும்,

" तालुमूले च यत् पद्मं सहस्रारं पुरोदितम् ।
तत्कन्दे योनिरेकास्ति पश्चिमाभिमुखी मता ॥
तस्य मध्ये सुषुम्नाया मूलं सविवरं स्थितम् ।
ब्रह्मरन्ध्रं तदेवोक्तमामूलाधारपङ्कजम् ॥
ततस्तद्रन्ध्रे तच्छक्तिः सुषुम्ना कुण्डली सदा ।"

(शि० सं० ५-१२०, १२१)

—" தாலுவினுடைய அடியிலே யாதொரு பத்மம் உள்ளதென்று முன்பு சொல்லப்பெற்றதோ, அந்த ஸஹஸ்ராரத்தினுடைய கந்தத்தில் பின்புறமாகத் திரும்பியிருப்பதும், முக்கோண வடிவம் கொண்டதுமான ஒரு யோநியும் (பீடமும்) இருப்பதாகும். அந்த யோநியினுடைய நடுவிலேதான் ஸுஷும்னையினுடைய மூலமானது (அடிப்பக்கம்) த்வாரத்தோடு கூடியதாக இருக்கும். அதையே மூலாதாரம் வரையில் செல்லுகின்ற ப்ரஹ்மரந்த்ரம் எனவும் சொல்லப்பெறும். அதனுடைய த்வாரத்திலே தான் சக்தியாம் குண்டலினியானது இடைவிடாது உறைவதாகும்.

5. மேலும்,

" सुषुम्नायां सदा शक्तिश्चित्रा सा मम वल्लभा ।
तस्यां मम मते कार्या ब्रह्मरन्ध्रादिकल्पना ॥
मूलपद्मस्थिता योनिर्वामदक्षिणकोणतः ।
इडापिङ्गलयोर्मध्ये सुषुम्नायोनिमध्यगम् ॥
ब्रह्मरन्ध्रं तु तत्रैव सुषुम्नाधारमण्डले ॥"

(शि० सं० १५-१२२–२४)

—" அந்த ஸுஷும்னையிலே என்னுடைய அன்புக்குரிய அந்த சித்ரா என்ற சக்தி நாடியானது எப்பொழுதும் நிலைத்துள்ளது. ஓ பார்வதி! அவ்விடத்திலே ப்ரஹ்மரந்தரம் முதலியவைகள் இருப்பதாகச் சிந்தனை செய்ய வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்;

6. மற்றும் மூலாதார கமலத்தினுடைய கர்ணிகையிலுள்ள யோநியினுடைய இடது வலது கோணங்களிலே முறையே இடா, பிங்களா என்ற நாடிகளுடைய நடுவேயுள்ள ஸுஷும்னையினுடைய மத்யபாகத்தைச் சார்ந்து ப்ரஹ்மரந்த்ரமும் அவ்விடத்திலேயே ஸுஷும்னையினுடைய ஆதார மண்டலமும் (உள்ளது)" எனவும் சிவஸம்ஹிதை கூறும்.

7.—"மேலும். "ப்ரஹ்மரந்த்ரத்தில் யாதொரு பத்மமுள்ளதோ, அது ஸஹஸ்ராரமெனச் சொல்லப்பெறும். அக் கமலத்தினுடைய கந்தத்திலே யாதொரு யோநியுண்டோ, அந்த யோநியிலே (பீடம்) சந்த்ரனும் வஸிக்கின்ருன். முக்கோணவடிவாயமைந்துள்ள அந்த யோநியியிருந்து அமுதமானது இடைவிடாது பெருகிக்கொண்டுமிருப்பதாம். சந்த்ரனும் அவ்விடமுள்ள இடாநாடியைப் பன்மடங்காகப் பெருகும்படி செய்கிருன்" எனவும்;

8. அவ்விதமே;

"मूलाधारे हि यत् पद्मं चतुष्पत्रं व्यवस्थितः ।
तत्र मध्ये हि या योनिस्तस्यां सूर्यो व्यवस्थितः ।
तत् सूर्यमण्डलं द्वारं विषं क्षरति संततम् ।" (शि० सं० ७०६)

"மூலாதாரத்திலே நான்கு தளங்களுடன் கூடிய யாதொரு கமலமுண்டோ, அக்கமலத்தினுடைய நடுவிலே யாதொரு யோநியுண்டோ, அந்த யோநியிலே ஸூர்யன் வாஸம் செய்கிருன். அந்த ஸூர்யமண்டலத்திலிருந்து விஷமானது எப்பொழுதும் இடைவிடாது பெருகுவதாகும்" எனச் சிவஸம்ஹிதையும் சொல்லும்,

9. இத்தகைய நாடிகள் இரண்டையும் அறிஞர்கள் சாஸ்த்ரங்களில் முறையே பின்வருமாறு உருவகம் செயதுள்ளனர். அதாவது;

"इडा गङ्गा पुरा प्रोक्ता पिङ्गला चार्कपुत्रिका ।
मध्या सरस्वती प्रोक्ता तासां सङ्गोऽपि दुर्लभः ।
स्नानाचरणमात्रेण पूतो भवति तत्र च ।
मृत्युकाले प्लुतं देहं त्रिवेण्याः सलिले यदा ।
विचिन्त्य यस्त्यजेत् प्राणान् तदा मोक्षमवाप्नुयात् ॥"

(शि० सं० ५ ९९३, १३८, १३९)

—"இடாநாடியை கங்கையெனவும், பிங்களா நாடியை யமுனை எனவும், ஸுஷும்னையை ஸரஸ்வதீ எனவும் கூறுவர். இவை மூன்றும் ஒன்ருகக் கூடுமிடத்தையே த்ரிவேணீ எனவும் அழைப்பர். அவ்விடத்திலுள்ள அமுதஜலத்தில் ஸ்நாநம் செய்கின்றவன் பரிசுத்தம் பெறுகின்ருன். மரணகாலத்தில் கிடைக்கத்தகாத இந்த த்ரிவேணீ ஜலத்திலே சரீரம் எப்பொழுது நனைக்கப் பெறுகின்றதாக எவன் சிந்தனை செய்துகொண்டு பிராணனை விடுகின்ருனே, அவன் அப்பொழுதே மோக்ஷத்தை யடைகின்ருன்" எனவும் சிவஸம்ஹிதை கூறும்.

10. இங்கு சக்தியுபாஸகர்களுடைய மதத்தில் ஆஜ்ஞாசக்ரம் மாத்திரம் மேல் நோக்கியுள்ளது என்றும், மற்ற ஐந்தும் கீழ் முகமாக இருப்பன வெனவும் கூறப்பெற்றுள்ளது. இக்கருத்தை சாக்தாகமமும் வலியுறுத்தும். அதாவது:

"आज्ञाचक्रं महेशानि पद्ममूर्ध्वमुखं सदा ।
तत्रोपरि महेशानि सदा ध्यायेच्छिवं विभुम् ।" (शाक्त०)

—"ஓ மஹேசாநி! ஆஜ்ஞை என்னும் சக்ரமானது எப்பொழுதும் மேல் நோக்கிய முகத்துடன் இருப்பது. அதற்கு மேலே மிகுந்த ஒளியுடன் விளங்குகின்ற ஸதா சிவனை அவ்விடத்தில் த்யாநம் செய்யவேண்டும்" எனச் சொல்லும்.

11. இவ்விதம் கீழ்முகமாயுள்ள ஸஹஸ்ரார கமலத்திலே அடங்கியுள்ள த்வாதச (பன்னிரண்டு) தளத்தின் மீது ஸதாசிவனை த்யாநம் செய்ய வேண்டுமென் பதை **யாமளவசனமும்** வலியுறுத்தும். அது வருமாறு:

"ब्रह्मरन्ध्रसरसीरुहोदरे
नित्यलग्नमवदातमद्भुतम् ।
कुण्डलीविवरकाण्डमण्डितं
द्वादशार्णसरसीरुहं भजे ॥" (यमालम्)

—"ப்ரஹ்மரந்த்ரம் என்னும் தாமரையின் நடுவே வெண்ணிறத்துடன் எப்பொழுதும் இடைவிடாது வியக்கத் தக்க விதமாக நிலைத்த லயத்தை யடைந்துள்ள குண்டலிநி யினுடைய த்வாரத்தோடு கூடிய பன்னிரண்டு தளங் களுடன் இணைந்துள்ள கமலத்தைம் பாவனை செய்கிறேன்" என்பது அச்செய்யுளின் கருத்து. இவ்விடத்தில், "குண்டலீ விவர காண்டமண்டிதம்" என்றது மூலாதரத் தோடு கூடியது எனப் பொருள் கொண்டு கூறியதாகும்.

12. இச் செய்யுள் முதல் ஐந்து செய்யுட்கள் அடங்கிய **பாதுகாபஞ்சகம்** என்னும் அழகிய ஸ்தவத்திலே எமது தமிழுரையிலே எல்லாச் செய்யுட் களுக்கும் விஸ்தாரமாகப் பொருள் விளக்கம் கொடுத் திருப்பதோடு, ஸ்ரீ குருவின் தத்துவநிலையையும் விஸ்தார மாக விளக்கியிருப்பதால் வாசகர்கள் அங்கு கண்டு தெரிந்து கொள்ளலாம்.

13. ஸமயாதந்த்ரத்திலே, ஸஹஸ்ராரபத்மம் சிரஸிலுள்ளதாகச் சித்தரித்துள்ளது. அது வருமாறு;

"मूर्ध्नि पद्मं सहस्रारं रक्तवर्णमधोमुखम् ।
तस्य मध्ये स्थितं ध्यायेद् गुरुं शान्तं सशक्तिकम् ।
मूलाधारे महाशक्तिः कुण्डलीरूपधारिणम् ।
अधोवक्त्रक्रमेणैव सर्वपद्मेषु भावयेत् ।" (स० त०)

—"ஸஹஸ்ராரமென்னும் பத்மம் சிரஸிலுள்ளது. அது சென்னிறத்தோடு பொலிவதாகும். கீழ்முகமாகவு முள்ளது. அந்த பத்மத்தினுடைய நடுவிலே சக்தியோடு சாந்தகுண வடிவாயமைந்துள்ள ஸ்ரீகுருவைச் சிந்தனை செய்யவேண்டும். அவ்விதமே மூலாதாரத்தில் குண்டலிநீ சக்தி வடிவாய்த் திகழுகின்ற மஹாசக்தியைக் கீழ் நோக்கிய முகமாகயிருப்பதாகக்கொண்டு ஸகல பத்மங் களிலும் சிந்தனை செய்யவேண்டும்" என்பதாகும்.

14. எனவே இச்சிறப்பு வாய்ந்த ஸஹஸ்ரார கமலத்திலே ஒளியுடன் இலங்கும் ஸுஷும்னையினுடைய

நுனியிலேதான் முப்பத்திரண்டு இதழ்கள் கொண்ட த்வாதசாந்த மென்னும் பத்மமுள்ளது என்பதும், அது கீழ் நோக்கியிருப்பது எனவும் கிடைப்பதாகும். இக்கருத்தை யோகதீபமும் வலியுறுத்தும். அதாவது:

“ अधोमुखं सुषुम्नाधो द्वात्रिंशद्दलसंयुतम् ।
कपालपद्मं निहितं द्वादशान्तमितीरितम् ॥ ” (यो० दी०)

—“ ஸுஷும்னையினுடைய நுனியிலே கீழ்நோக்கியுள்ள ஸஹஸ்ராரத்தில் முப்பத்திரண்டு இதழ்களோடு கூடிய கமலமொன்று பொருத்தப் பெற்றுள்ளது. அதை த்வதாசாந்தம் (கபாலபத்மம்) என அழைப்பர்” என்பதாகும்.

15. இப்பெருமைவாய்ந்த கமலத்தில் சாக்த யோகிகள் யாகிநீ தேவியைச் சிந்தனை செயவர். அச்சிந்தனையும் வருமாறு—

“ मण्डव्योमस्थपद्मे सकलदलयुते याकिनीं भैरवीं तां
यक्षिण्याख्यां समस्तायुधलसितकरां सर्ववर्णां समष्टिम् ।
वाटीनां सर्ववक्त्रां सकलसुखकरीं शुक्लधातुस्वरूपां
सर्वान्ने सक्तचित्तां सकलसुरनुतां भावयेत् सर्वरूपाम् ॥ ”

—“ ஸகல தளங்களுடன் கூடிய சிரஸிலுள்ள ஸஹஸ்ரார (ஆகாய) பத்மத்தில் பலவகையான ஆயுதங்களைக் கைகளிலே தரித்துக்கொண்டு இருப்பவளும், பல நிறவர்ணங்களுடைய ஸமஷ்டி வடிவாய்த் திகழ்பவளும், பல முகங்களைக்கொண்டவளும், ஸகல ஸுகங்களைச் செய்து கொடுப்பவளும், பலவகையாம் அன்னங்களில் ப்ரீதியுள்ளவளும், ஸகலதேவதைகளாலும் போற்றப் பெறுகின்றவளும், சுக்லதாதுவின் மீது அமர்ந்துள்ளவளும், ஸமஸ்த வடிவங்களாகக் திகழ்பவளும், பயங்கரவடிவாயுள்ளவளும் ஆன யக்ஷிணீ எனச் சொல்லப்பெறுகின்ற அந்த யாகிநீ தேவியைச் சிந்தனை செய்யவேண்டும்.” என்பதாகும்.

16. அகந்தையை யகற்றிய யோகிகளோவெனில், இவ்விடத்தில் ஹம்ஸவடிவாய்த் திகழுகின்ற ஸ்ரீ குருவைச் சிந்தனை செய்கின்றனர். அச்சிந்தனையும் வருமாறு;

“ सहस्रदलपङ्कजे सकलशीतरश्मिप्रभं
वराभयकराम्बुजं विमलगन्धपुष्पाम्बरम् ॥
प्रसन्नवदनेक्षणं सकलदेवतारूपिणं
स्मरेच्छिरसि हंसकं तदभिधानपूर्वं गुरुम् ॥ ”

—“ ஸஹஸ்ர தளகமலத்திலே பலவகையாம் குளிர்ந்த கிரணங்களைக் (கதிர்கள்) கொண்டு திகழுகின்ற சந்த்ரனைப் போன்ற காந்தியுள்ளதும்; வரம், அபயம், என்ற இரண்டு முத்ரைகளுடன் கூடிய அழகிய தாமரைபோன்ற கைகளையுடையதும், நறுமணம் கமழும் புஷ்பமென்னும் பரிசுத்தமான வஸ்ரத்தை யணிந்து தெளிந்த முகத்துடன் துலங்கும் அழகிய திருநோக்கை கொண்டதும், ஸமஸ்த தேவதைகளுடைய வடிவாய்த் திகழ்வதும், சிரஸிலே ஹம்ஸகம் என்ற பெயரை முன்னே கொண்டதுமான அந்த ஸ்ரீகுருவைச் சிந்தனை செய்யவேண்டும்” என்பதாகும்.

இவ்விதம் ஏழாவது ஆதாரமாகிய
ஸஹஸ்ரார கமலத்தினுடைய
விளக்கம் இவண் முற்றும்.

பின்னுரை

1. இவ்விதம் விஸ்தாரமாக விளக்கப்பெற்ற ஆறு ஆதாரங்களையும்;

" शिवस्थानं शैवाः परमपुरुषं वैष्णवगणाः
लपन्तीति प्रायो हरिहरपदं केचिदपरे ।
पदं देव्या देवीचरणयुगलाम्भोजरसिकाः
मुनीन्द्रा अप्यन्ये प्रकृतिपुरुषस्थानममलम् ॥ "

(ஷ. நி. ௭-௪௪)

—"சிவனுடைய இருப்பிடமெனச் சைவர்களும், விஷ்ணுவிடைய இருப்பிடமென வைஷ்ணவர்களும், ஹரி ஹரனுடையது என ஹரிஹராத்வைதிகளும், தேவியி னுடைய சரணங்களையுபாஸிக்கின்ற ரஸிகர்களான சாக்தர்கள் தேவியினுடைய இருப்பிடம் எனவும், மற்ற முனிவர்களும், ஸாங்க்யர்களும் பரிசுத்தமான ப்ரக்ருதி புருஷர்களுடைய இருப்பிடமெனவும், தத்தம் அறிவின் முதிர்ச்சிக்கேற்றவாறு உபாஸித்து வருகின்றனர்" என ஷட்சக்ரநிருபணம் என்னும் நூலில் சொல்லியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

2. எனவே, மேருதண்டத்திலிருக்கின்ற ஸுஷும்னை யோடு ஒன்றிய ஆதாரங்கள் இரண்டு என்பதும் கிடைப்பதாகும். அவை முறையே மூலாதாரமும், ஸஹஸ்ராரமும் ஆகும். மற்ற ஐந்து ஆதாரங்களும் முறையே; ஸ்வாதிஷ்டானம் லிங்கத்தின் அடியிலும், மணிபூரகம் நாபியிலும், அநாஹதம் ஹ்ருதயத்திலும், விசுத்தி கழுத்திலும், ஆஜ்ஞை புருவங்களின் நடுவிலும் இருப்பனவாம். இவ்வைந்தும் ஸுஷும்னையுடன் சேரா திருப்பனவாம் எனவும் கல்பனை செய்யப்பெற்றுள்ளது.

3. ஆயினும், யோகிகள் ஆஜ்ஞை வரையிலுள்ள ஆதாரங்களையும் மூலாதாரத்தில் அடங்கியுள்ளவைக ளாகவே சிந்தனை செய்வர். இக்கருத்தை விளக்குவதே போல இந்த ஸ்தவத்தின் துவக்கத்திலே, "ஆறு ஆதாரங்களென்னும் தாமரை மலரின் நடுவே இலங்கும் ஸுஷும்னையினுடைய நடுவில்" எனவும் வர்ணித் துள்ளது இங்கு குறிப்பாகக் கவனிக்கத் தக்கது.

4. மற்றும், சித்ரா நாடியோடு கூடிய குண்டலினீ சக்தியானது, ஸஹஸ்ராரகமலத்திலுள்ள சிவன் என்ற மாறுபட்ட பெயரைப் பெற்று, சந்த்ரனை யடைந்து. அமுதத்தைப் பெருகச் செய்து, அந்த அமுதப் பெருக் கினுல் சரீரத்திலுள்ள ஸகல நாடிகளையும் நனையச் செய்யும் பொழுது யோகிகள் தாரணையென்னும் பழக்கத்தின் உதவியினுல் அந்த அமுதத்தைப் பருகிப் பேரானந்தமடை கின்றனர்.

5. இன்னேரன்ன பல கருத்துக்களையும் ஒருங்கே அமைத்து, வெகு அழகாக ஸ்ரீசங்கரபகவத்பாதர் வர்ணித்துள்ளது உபாஸகர்களுக்கு ஓர் நல்விருந்தாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லையன்றே! இச்சிறிய ஸ்தவத்தை, தத்துவ விளக்கங்களிலே விழைகின்ற

உபாஸகன் அநுஸந்தாநம் செய்யவேண்டுமெனச் சொல்லுவதும் மிகையாகாது.

6. இந்த ஸ்தவத்திற்கு, இதைவிட இன்னும் பல நூல்களையும் ஒப்புநோக்கி விரிவாக உரை எழுதமுடியும். ஆயினும் அதை வாசகர்கள் முற்றும் உணர்ந்து கொள்ளுவதற்கும், பொறுமையுடன் படிப்பதற்கும் அவகாசமில்லாததோடு, ஆலஸ்யமும் (அலுப்பு) உண்டாகிவிடும். இதற்குக் காரணமும் அவரவர்களுடைய தாரணசக்தியையும் ஓரளவு பொருத்திருப்பதுமாகும்.

7. எனவே, பல நூல்களையும் ஒப்புநோக்கி, ஒருவாறு எனது சிற்றறிவிற்கு எட்டிய வரையில், புத்தகம் பெருகி விடுமோ என்ற அச்சத்தின் காரணத்தால் மிகவும் சுருக்கி எழுதியுள்ளேன். அன்னையின் தொழும்பர்களாம் வாசகர்கள் இந் நூலைப் படித்து தத்தம் அநுபவத்திற்கும், மதியின் வளர்ச்சிக்கும் உகந்த முறையிலே தாரணை செய்து, அன்னையாம் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியின் அருளுக்குத் தகுதியுள்ளவர்களாகத் தங்களைச் செய்து கொள்ளவேண்டுகிறேன். சிவம்.

இங்ஙனம்

வாதூல, வே. ராமசந்த்ர சர்மா.

ஸ்ரீ:

॥ श्री भवानीभुजङ्गस्तोत्रम् ॥

षडाधारपङ्केरुहान्तर्विराजत्
सुषुम्नान्तरालेऽति तेजोल्लसन्तीम् ।
पिबन्तीं सुधामण्डलं द्रावयन्तीं
सुधामूर्तिमीडे महानन्दरूपाम् ॥ १ ॥

ஷடாதார பங்கேருஹாந்தர் விராஜத்
ஸுஷும்நாந்தராலேऽதிதேஜோல்லஸந்தீம்.
பிபந்தீம் ஸுதாமண்டலம் த்ராவயந்தீம்
ஸுதா மூர்த்திமீடே மஹாநந்தரூபாம். (1)

(ப - ரை) षडाधारपङ्केरुहान्तर्विराजत् सुषुम्नान्तराले-ஆறு ஆதாரங்களென்னும் தாமரை மலரின் நடுவே நன்கு ஒளியுடன் இலங்கும் ஸுஷும்நா நாடியினுடைய நடுவில்; अति-तेजोल्लसन्तीम्-மிகுந்த காந்தியுடன் மிளிருகின்றதும், सुधामण्डलम्-(சிரஸிலுள்ள) சந்த்ரமண்டலத்தை; द्रावयन्तीम्-பெருகச் செய்கின்றதும், पिबन्तीम्-(பெருகிவருகின்ற அந்த அமுதத்தை) பருகுகின்றதும், महानन्दरूपां-பரமாநந்த வடிவாயுள்ளதுமான, सुधामूर्तिम्-அமுதவடிவாம் (குண்டலினீ சக்தியை - பவாநியை) அன்னையை, ईडे-துதிக்கிறேன்.

(பொ - ரை) மலர்ந்த தாமரை மலரின் வடிவம் கொண்ட மூலாதாரம் முதலிய ஆறு ஆதார சக்ரங்களுடைய நடுவில் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றதும், ஒளியுடன் விளங்குவதுமான ஸுஷும்நா நாடியின் நடுவில், அளவு கடந்த ஒளியுடன் இலங்குவதும், சிரஸிலுள்ள சந்த்ரமண்டலத்தைப் பெருகச் செய்கின்றதும், அவ்

விடமிருந்து இழிந்து வருகின்ற அமுதத்தைச் சுவைத்த வண்ணமிருப்பதும், பரமாநந்தவடிவாயமைந்துள்ளதும், அமுதமயமான வடிவம் கொண்டுள்ளதுமான குண்டலிநீ சக்தியாம் ஸ்ரீ பாவாநியை நான் துதிக்கிறேன்.

(வி - ரை) நன்கு மலர்ந்த தாமரை மலர் போலச் சுற்றிலும் மிகவும் நுண்ணியவையான மாம்ஸத்துணுக்குகளோடுகூட மூலாதாரம் முதல் சிரஸ்வரையிலும் அடுக்கடுக்காக அமைந்து, அந்த அந்த இருப்பிடங்களிலே குறிப்பிட்ட பெயர்களால் அறியக்கூடியவைகளான ஆறு ஆதாரங்கள் நமது சரீரத்தில் அமைந்திருப்பனவாம். அவைகளை முறையே; **மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை** என அறிஞர் அழைப்பர்.

அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிஷ்டாந தேவதைகளோடு இணைந்திருப்பனவாம். நூல் பிடித்தது போல அவைகள் நேரே சென்று கொண்டிருப்பதுமாகும். அவைகளுடைய இடது புறத்திலும், வலது புறத்திலும் முறையே, இடா, பிங்களா என்ற இரண்டு நாடிகளுண்டு. இவையிரண்டும் மிகவும் நுண்ணியவையாயிருப்பனவும் ஆம். இவை மூலாதாரத்திலுள்ள நாடியினுடைய அடியிலிருக்கும் கந்தத்திலிருந்து (கந்தம் - கிழங்கு) புறப்பட்டுச் சிரஸிலுள்ள ஆஜ்ஞை (புருவத்தின் நடு) வரையிலும் செல்லுவன.

இந்த ஆஜ்ஞைக்கு மேலேதான் சந்த்ரகலையுமுள்ளது. இவ்விடத்திலேதான் அழிவிலா அமுதமும் நிரம்பியுள்ளது. மூலாதாரம் எனச் சொல்லப்பெறுகின்ற நாடியினுடைய அடியிலேதான் குண்டலிநீ என்ற நாடியுமுள்ளது. அந்த

நாடியைத்தான் **சக்தி,** பவாநீ, த்ரிபுரா, பரா என்ற பல படியான பெயர்களைக்கொண்டு உபாஸகர்கள் அழைக்கின்றனர். அந்தக் குண்டலிநியும் சுருண்டு கொண்டு மண்டலவடிவாக உறங்கும் பாம்பைப்போலத் திகழ்வதாகும்.

யோகிகள் ரேசகம், பூரகம், கும்பகம் என்ற இவைகளுடைய உதவியினால் கீழ்நோக்கிய முகத்துடன் உறங்குவதுபோலுள்ள இக் குண்டலிநியை மேல் நோக்கச் செய்து, முன்பு சொல்லப்பெற்ற ஸுஷும்நையினுடைய நடுவேயுள்ள பிலத்திற் (த்வாரம்) செலுத்தி **ப்ரஹ்மக்ரந்தி, விஷ்ணுக்ரந்தி, ருத்ரக்ரந்தி** என்ற பெயருள்ளதும் **நாபி, ஹ்ருதயம், கண்டம்** (தொப்பூழ், மார்பு, கழுத்து) என்ற இடங்களிலே முறையே உறைபவையுமான இம் மூன்று முடிச்சுக்களையும் பிளக்கச்செய்து ஆஜ்ஞாசக்ரம் வரையிலும் கொண்டுபோக முயற்சிப்பர்.

இவ்விதம் கொண்டு சென்றால், அக்குண்டலிநியானது அங்கு அஜ்ஞா சக்ரத்திற்கு மேலேயுள்ள ஸஹஸ்ரதளத்திலுள்ள சந்த்ரகலையை முட்டும். அப்பொழுது அவ்விடமிருந்து பெருகிவருகின்ற அமுதப் பெருக்கினால் சரீரம் நனைக்கப் பெறும் இக்கருத்தைக்கொண்டே "குண்டலிநீ என்னும் பாம்பானது சந்திரகலையைக் கடிப்பது" எனவும், அவ்விதம் கடிக்கப்பெற்ற இடத்திலிருந்து பெருகிவருகின்ற அமுதத்தை யோகிகள் பருகி, அழிவிலா ஆனந்தமடைகின்றனர் எனவும் யோக நூல்கள் கூறுகின்றன. இப்பெருமை வாய்ந்த அமுதப் பெருக்கையே மஹாநந்தமென்றும் மோக்ஷஸாம்ராஜ்ய

மென்றும், சக்தியுபாஸகர்கள் கருதுகின்றனர். இவை போன்ற மற்றும் பற்பல விஷயங்களையும் மனதிலே சிந்தித்துக் காணவேண்டுவது அவசியமுமாகும்.

இவ்விடத்தில், மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களுடைய நடுவிலே ஒளியுடன் திகழுகின்ற ஸுஷும்நா நாடியினுடைய இடையே இலங்குவதும், ஆஜ்ஞாசக்ரம் வரையில் பரவிக்கொண்டு, உறைதலால் (ஸ்பர்சம்) பெருகச்செய்கின்ற அமுதத்தைப் பருகிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் ப்ரஹ்மாநந்த வடிவாய்த்திகழும் குண்டலினீ என்ற ஸ்ரீபவாநீ தேவியை நான் துதிசெய்கிறேன் என்பது இச்செய்யுளின் திரண்டஸாரமாகும்.

இச்சிறிய ஸ்தவத்திலே பொருட் செறிவுடன் கூடிய ஆழ்ந்த உட்கருத்துக்களையமைத்து ஸ்ரீஆசார்யசங்கர பகவத்பாதர் அருளியிருப்பதை நுண்ணிய மதியுடன் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் விந்தையிலும் விந்தையாயிருப்பதோடு, நமது மனதைக் கவரக்கூடிய வல்லமை பெற்றுள்ளது என்பதும் புலனாகும். எனவே இந்த ஸ்தவத்திலே அமைந்துள்ள ரஹஸ்யார்த்தங்களையும், தத்துவ விளக்கங்களையும், வாசகர்கள் படித்து ரஸிக்க வேண்டுமென்ற விருப்பத்தின் விழைவாக இந்நூலின் துவக்கத்திலே "தோற்றுவாய்" என்ற தலைப்பின்கீழ் எனது சிற்றறிவிற்கு எட்டியவரையில் ஓர் சிறிய விளக்கம் கொடுத்துள்ளேன். அதை உபாஸகர்களாகிய வாசகர்கள் தத்தம் அறிவின் வளர்ச்சிக்குகந்தவாறு உணர்ந்து பயன் படுத்திக் கொள்ளுவார்களாக. (1)

THE KUPPUSWAMI S…
RESEARCH INSTITUT…
MYLAPORE, CHENNAI-…

ज्वलत्कोटिबालार्कभासारुणाङ्गीं
सुलावण्यशृङ्गारशोभाभिरामाम् ।
महापद्मकिञ्जल्कमध्ये विराजत्-
त्रिकोणोल्लसन्तीं भजे श्रीभवानीम् ॥ २ ॥

ஜ்வலத் கோடி பாஸார்க்க பாஸாருணாங்கீம்
ஸுலாவண்ய ச்ருங்கார சோபாபிராமாம்.
மஹாபத்ம கிஞ்ஜல்கமத்யே விராஜத்-
த்ரிகோணோல்லஸந்தீம் பஜே ஸ்ரீபவாநீம். (2)

(ப - ரை) ज्वलत्-कोटि-बालार्क-भास-अरुणाङ्गीम्- ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற எண்ணற்ற இளம்பருதிகளுடைய (உதயகாலத்திலே தோன்றும்) காந்திகளினால் செந்நிறம் பொருந்திய சரீரத்தையுடையவளும், सुलावण्य-शृङ्गार-शोभा-अभि-रामाम्-நன்கு அழகிய அவயவங்களோடு கூடிய ச்ருங்கார சோபையினால் மனோஹரமா யிருப்பவளும், महापद्म-किञ्जल्क-मध्ये பெரிய தாமரைப் புஷ்பத்தினுடைய கேஸரங்களோடு கூடிய கர்ணிகையின் நடுவில்; विराजत्-त्रिकोण-उल्लसन्तीम्- நன்கு ஒளிருகின்ற முக்கோணத்திலே ஒளியுடன் விளங்கிக் கொண்டிருப்பவளுமான, भवानीम्- ஸ்ரீபவாநீதேவியை; भजे-(நான்) ஸேவிக்கிறேன்.

(பொ - ரை) உதய காலத்திலே தோன்றும் இளம்பருதிகளின் தொகுதிகளுடைய காந்திகளே போலச் செந்நிறத்தோடு விளங்குகின்றவளும், வனப்பு மிகுந்த பொலிவுடன் விளங்குகின்ற பாவம், ஹாவம்,முதலிய ச்ருங்கார சேஷ்டை

களால் கண்டோர் மனதைக் கவருகின்றவளும், பெரிய தாமரைமலரின் நடுவேயுள்ள கர்ணிகையினுள்ளே விளங்குகின்ற முக்கோணத்திலே ப்ரகாசித்துக்கொண்டிருப்பவளுமான குண்டலிநீ வடிவாய்த் திகழுகின்ற ஸ்ரீபவாநியாம் அன்னையை நான் ஸேவிக்கிறேன். (2)

(அவதாரிகை) முன் இரண்டு செய்யுட்களில் உபாஸனைக்குரியதான (குறிக்கோள்) ஸ்ரீ தேவியிடைய வடிவம் பெரும்பாலும் பொதுவாக வர்ணிக்கப்பெற்றுள்ளது. இனி இச்செய்யுள் முதல் ஏழு செய்யுட்கள் வரையில், உபாஸகனுடைய மனம் ஒரு நிலைப்படும் வகையிலே மூர்த்தி வடிவாயமைந்த அன்னையாம் ஸ்ரீ பவாநியினுடைய பாதம் முதல் கேசம் வரையிலுள்ள ஒவ்வொரு அவயவமும் வர்ணிக்கப் பெறுகின்றது.—

क्वणत् किंकिणीनूपुरोद्भासिरत्न
प्रभालीढलाक्षार्द्रपादारविन्दम् ।
अजेशाच्युताद्यैः सुरैः सेव्यमानं
महादेवि मन्मूर्ध्नि ते भावयन्ति ॥ ३ ॥

க்வணத் கிங்கிணீ நூபுரோத்பாஸிரத்ந-
ப்ரபாலீடலாக்ஷார்த்ர பாதாரவிந்தம்
அஜேசாச்யுதாத்யை: ஸுரை: ஸேவ்யமாநம்.
மஹாதேவி மந்மூர்த்நி தே பாவயந்தி. (3)

(ப - ரை) महादेवि-ஸ்வயம் ப்ரகாசவடிவாகத் திகழும் ஓ அன்னையே! अज-ईश-अच्युत-आद्यैः— அயன் (ப்ரஹ்மா)

அரன் (சிவன்) அரி (விஷ்ணு முதலியவர்களாலும், सुरैः-தேவர்களாலும், सेव्यमानम्-ஸேவிக்கப்பெற்ற, ते-உன்னுடைய, क्वणत्-किंकिणी-नूपुर-उद्भासि-रत्न-प्रभा लीढ-आर्द्र-पाद-अरविन्दम् ஒளியுடன் இலங்கும் சலங்கைகளோடு கூடிய காற்சிலம்புகளிலே திகழுகின்ற ரத்நங்களுடைய ப்ரபைகளால் பரவியுள்ள செம்பருத்திக் குழம்புகளால் நனைந்திருக்கின்ற அரவிந்தம் போன்ற பாதங்களை, मत्-मूर्ध्नि-என்னுடைய தலையில், भावयामि-சிந்தனை செய்கிறேன்.

(பொ—ரை) தன்னொளி கொண்டு திகழும் ஓ அன்னையே! என்னுடைய சிரஸிலுள்ள முக்கோணத்திலே ஒளியுடன் விளங்கும் உனது சென்னிறச் சேவடியை நான் த்யாநம் செய்கிறேன். அத்திருவடியோவெனில்! ஆதிசேஷனாலும் வர்ணிக்கவியலாத பெருமை வாய்ந்ததன்றோ! மற்றும் நான்முகன், சிவன், விஷ்ணு என்ற முத்தொழிலைச் செய்கின்ற தேவர்களாலும், இந்த்ரன் முதலிய தேவர்களாலும், எப்பொழுதும் ஸேவித்த வண்ணம் இருப்பதன்றோ! மேலும் பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்ய விழையும்பொழுது ஒன்றுக்கொன்று உரைந்து கொள்ளுகின்ற காரணத்தால் ஒலிக்கின்ற சலங்கைகளோடு கூடிய காற்சிலம்புகளிலே விண்மீனென வெளியே மிளிருகின்ற ரத்நங்களுடைய காந்திகளோடு பரவிய லாக்ஷாரஸத்தினால் நனைந்திருக்கின்ற செந்தாமரையெனத் துலங்கும் உனது சென்னிறச் சேவடியென்பதுமாம். இப்பெருமை வாய்ந்த உனது திருவடியை நான் எப்பொழுதும் என்னுடைய சிரஸிலுள்ள முக்கோணத்திலே நிலைத்திருக்க த்யாநம் செய்கிறேன் என்பது ஸாரம். (3)

सुशोणाम्बराबद्धनीवीविराज-
न्महारत्नकाञ्चीकलापं नितम्बम् ।
स्फुरद्दक्षिणावर्तनाभिं च तिस्रो
वलीरम्ब ते रोमराजिं भजेऽहम् ॥ ४ ॥

ஸுசோணும் பராபத்த நீவீவிராஜந்-
மஹாரத்ந காஞ்சீகலாபம் நிதம்பம்.
ஸ்புரத் தக்ஷிணுவர்த்தநாபிம் ச திஸ்ரோ
வலீரம்ப தே ரோமராஜிம் பஜேऽஹம். (௪)

(ப-ரை) सुशोण-अम्बर-आबद्ध-नीवी-विराजत्-महा-रत्न-काञ्ची-कलापम्-நன்கு சிவந்த வஸ்த்ரத்திஞல் சுற்றும் கட்டப்பட்டிருக்கின்ற முடிச்சின் மீது இலங்கும் இரத்தினங்கள் இழைத்த ஒட்டியாணத்தோடு கூடியதான, तव-உன்னுடைய, नितम्बम्-மத்ய பிரதேசத்தையும், स्फुरद्-दक्षिण-आवर्त-नाभिं-च-ப்ரகாசிக்கின்ற வலஞ்சுழியுடன்கூடிய நாபியையும், तिस्रः-மூன்று, वलीः-மடிப்புக்களையும், रोम-राजिम्-ரோமாவலியையும், अहम्-நான் ; भजे-ஸேவிக்கிறேன்

(பொ-ரை) அன்னேயே! இடுப்பிலே நன்கு சுற்றியிருக்கின்ற வஸ்த்ரத்தினுடைய முடிச்சின் மீது விளங்குகின்ற ரத்நங்களிழைத்த ஒட்டியாணத்தொடு கூடிய உன்னுடைய மத்யப்பிரதேசத்தையும், மிகுந்த ஒளியுடன் வலஞ்சுழியோடு இலங்கும் நாபியையும், உதரத்திலே யிலங்கும் மூன்று மடிப்புக்களையும், அவ்விதமே மூன்று ரோமாவலிகளையும் நான் ஸேவிக்கிறேன்.

(4)

लसद्वृत्तमुत्तुङ्गमाणिक्यकुम्भो-
पमश्रीस्तनद्वन्द्वमम्बाम्बुजाक्षि ।
भजे दुग्धपूर्णाभिरामं त्वदीयं
महाहारदीप्तं सदा विस्मितास्यम् ॥ ५ ॥

லஸத் வ்ருத்த முத்துங்கமாணிக்ய கும்போ-
பமஸ்ரீஸ்தநத்வந்த்வமப்ஜாக்ஷி மம்ப.
பஜே துக்தபூர்ணாபிராமம் த்வதீயம்
மஹாஹார தீப்தம் ஸதா விஸ்மிதாஸ்யம். (௫)

(பொ-ரை) अम्ब-ஓ அன்னேயே! लसद्-वृत्तम्-ஒளியுடன் வட்டவடிவாகத் திகழ்கின்றதும், उत्तुङ्ग-माणिक्य-कुम्भ-उपम-श्री-स्तन-द्वन्द्वम्-உயர்ந்து, ரத்னங்களிழைத்த குடத்திற்கு ஒப்பாக சோபையோடு விளங்குகின்ற தோற்றங்கள் இரண்டையும்; अम्बुज-अक्षि-தாமரையிதழ் போல நீண்ட கண்களையும்; दुग्ध-पूर्ण-अभि-रामम्-பால் நுரைபோல நிறைந்து விளங்குகின்ற; महा-हार-दीप्तम्-சிறந்த முத்துக்களான மாலேயிஞல் மிளிருகின்றதும் ஆன; त्वदीयम्-உன்னுடைய, विस्मित-आस्यम्-புன்முறுவலுடன் கூடிய முகத்தை, सदा-எப்பொழுதும் (நான்) भजे-ஸேவிக்கிறேன்.

(பொ-ரை) ஓ அன்னேயே! உயர்ந்ததும், ஒளியுடன் வட்டவடிவாகத் துலங்குகின்றதும், மாணிக்கங்களும், ரத்நங்களும், இழைந்த குடத்திற்குக் கொப்பாக காந்தியோடு விளங்குகின்றவைகளுமான தோற்றங்கள் (கொங்கைகள்) இரண்டையும்; தாமரை மலரின் இதழ் போன்ற நீண்ட அழகிய கண்களையும்; பாலின் நுரையே போன்று வெண்மையுடன் இலங்கும்

Scanned by CamScanner

முத்துக்களால் ஆன மாலையினால் ஒளிருகின்ற மந்த ஹாஸத்தோடு கூடிய உனது திருமுகத்தையும் நான் எப்பொழுதும் இடையறாது ஸேவிக்கிறேன். (5)

शिरीषप्रसूनोल्लसद्बाहुदण्डै-
र्दधद्बाणकोदण्डपाशाङ्कुशांश्च ।
चलत्कङ्कणोद्दामकेयूरभूषो-
ज्ज्वलत्पूर्णचन्द्रप्रभं ते भजेऽहम् ॥ ६ ॥

சிரீஷ ப்ரஸூநோல்லஸத் பாஹுதண்டைர்-
ததத் பாண கோதண்ட பாசாங்குசாம்ச்ச.
சலத் கங்கணோத்தாம கேயூர பூஷோ-
ஜ்வலத் பூர்ண சந்த்ரப்ரபம் தே பஜேऽஹம். (௬)

(ப-ரை) शिरीष-प्रसून-उल्लसद्-बाहु-दण्डैः—வாகைமலர் போல் மெல்லியதாய் மிளிருகின்ற கைகளினால், बाण-कोदण्ड-पाश-अङ्कुशान्-च-பாணம், தனுஸ், பாசம், அங்குசம் (மாவெட்டி) இவைகளை, दधत्-தரித்துக் கொண்டிருப்பதும், चलत्-कङ्कण-उद्दाम-केयूर-भूषा-उज्ज्वलत्- அசைகின்ற கங்கணங்கள், சிறந்த தோள்வலயங்கள், என்ற ஆபரணங்களால் விளங்குகின்றதும், पूर्ण-चन्द्र-प्रभम्-நிறைமதியை யொத்த காந்தியையுடையதுமான, ते-உன்னுடைய, रूपम्-வடிவத்தை, अहम्-நான், भजे-ஸேவிக்கிறேன்.

(பொ-ரை) ஓ அன்னையே! உனது திருமேனியிலே வாகைமலரைப் போல் மெல்லியதாக விளங்குகின்ற திருக்கரங்களிலே பாணம், தனுஸ், பாசம் (கயிறு) அங்குசம் (மாவெட்டி) இவைகளைத் தாங்கிக் கொண்டு, ஒளியுடன் ஒலிக்கின்ற கை வளையல்களோடும், சிறப்புடன் விளங்குகின்ற தோள் வலயங்களோடும், நிறைமதியெனப் பொலிவுறும் திருமுகத்தோடும் திகழ்கின்ற உனது திருவுருவை நான் சென்னியுற ஸேவிக்கிறேன். (6)

चलत्कुन्तलान्तर्भ्रमद्भृङ्गवृन्दा-
घनस्निग्धधम्मिल्लभूभिर्ज्वलं ते ।
स्फुरन्मौलिमाणिक्यबद्धेन्दुरेखा-
विलासोल्लसद्दिव्यमूर्धानमीडे ॥ ७ ॥

சலத்குந்தலாந்தர் ப்ரமத் ப்ருங்கவ்ருந்தா-
வ்நஸ்நிக்ததம்மில்லபூபிர்ஜ்வலம் தே.
ஸ்புரந் மௌலிமாணிக்ய பத்தேந்து ரேகா
விலாஸோல்லஸத்திவ்ய மூர்தா நமீடே. (௭)

(ப-ரை) (हे मातः-ஓ அன்னையே!) चलत्-कुन्तल-अन्त-भ्रमत् भृङ्ग-वृन्दावन-स्निग्ध-धम्मिल्ल-भूभिः-ज्वलम्-அசைகின்ற கருங்கூந்தல்களின் அருகிலே சுற்றித் திரியும் வண்டுகளுடைய கூட்டங்களினால் நெருக்கமாக மொய்க்கப் பெற்ற தலைமுடியினுடைய காந்தியினால் மநோஹரமாயும், स्फुरत् मौलि-माणिक्य-बद्ध-इन्दु-रेखा-विलास-उल्लसत्- ஒளியுடன் இலங்கும் கிரீடத்திலுள்ள மாணிக்கங்களுடைய இடையே இணைக்கப் பெற்ற பிறைமதியின் ரேகையினுடைய ஒளியினால் மிளிருகின்றதும் ஆன; ते-உன்னுடைய, दिव्य-मूर्धानम्-சிறப்புற்ற சிரஸை; अहम्-நான், ईडे-போற்றுகிறேன்.

(பொ-ரை) ஓ அன்னையே! உனது திருமேனியிலே அசைவுடன் திகழும் கருத்தடர்ந்த கூந்தல்களுடைய அருகிலே வீசுகின்ற நறுமணத்தைச் சுவைக்கச் சுற்றி

Scanned by CamScanner

வருகின்ற வண்டினங்களினால் வனப்புடன் விளங்கின்ற தலைமுடியை யுடையதும், ஒளியுடன் இலங்கும் கிரீடத்திலே இழைத்திருக்கும் இரத்தினங்களுக்கிடையே இணைந்துள்ள பிறைமதியினுடைய ரேகையினால் சோபையோடு விளங்குவதுமான உனது சிறந்த சிரஸை நான் போற்றுகிறேன். (7)

सुनासापुटं पद्मपत्रायताक्षं
मुखं देवि भक्तेष्टदश्रीकटाक्षम् ।
ललाटोज्ज्वलद्गण्डकस्तूरिभूषो-
ज्ज्वलत्पूर्णचन्द्रप्रभा ते भजेऽहम् ॥ ८ ॥

ஸுநாஸாபுடம் பத்மபத்ராயதாக்ஷம்
முகம் தேவி பக்தேஷ்டத ஸ்ரீகடாக்ஷம்.
லலாடோஜ்வலத் கண்ட கஸ்தூரி பூஷோ-
ஜ்வலத்பூர்ண சந்த்ரப்ரபம் தே பஜேऽஹம். (அ)

(ப-ரை) (हे मात -ஓ அன்னையே!) सु-नासा-पुटम्-அழகிய நாசியோடு கூடியதும், पद्म-पत्र-आयत-ईक्षणम्-தாமரையிதழ் போல் நீண்ட கண்களோடு கூடியதும், भक्त-इष्टद-श्री-कटाक्षम्-பக்தர்களுக்கு விருப்பியதைக் கொடுக்கின்ற அழகிய கடைக்கணிப்புடன் கூடியதும்; ललाट-उज्ज्वलत् गण्ड-कस्तूरि-भूषा-उज्ज्वलत्-நெற்றியில் துலங்குகின்ற மணங்கமழும் கஸ்தூரியினுடைய அலங்காரத்தினால் பொலிவுடன் விளங்குவதும், पूर्ण-चन्द्र-प्रभम्- நிறைமதியென ஒளியுடன் இலங்குவதும் ஆன, ते-உன்னுடைய, मुखम्-முகத்தை, अहम्-நான், भजे-ஸேவிக்கிறேன்.

(பொ-ரை) ஓ. அன்னையே! மிக்க வனப்புடன் துலங்குகின்ற நாசியோடு கூடியதும், மலர்ந்த தாமரை

THE KUPPUSWAMI SASTRI RESEARCH INSTITUTE
84, R. H. ROAD, MADRAS

யிதழ் போன்று நீண்டு செவ்வரி பரந்த கண்களோடு கூடியதும், பார்த்த அளவிலே பக்தர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களையும் கொடுக்கின்ற சோபையுடன் விளங்கும் கடைக்கண்களோடு கூடியதும், நறுமணங் கமழும் கஸ்தூரி, புனுகு இவைகளால் அலங்காரம் செய்யப்பெற்ற திருநுதலிலே துலங்கும் திலகத்தோடு கூடியதும், தண்ணொளி நிறைந்து ஒளியுடன் இலங்கும் நிறைமதியென ஆனந்தத்தைக் கொடுப்பதுமான உனது திருமுகத்தை நான் இடைவிடாது ஸேவிக்கிறேன். (8)

(அவதாரிகை) இதுவரையில் ப்ரதீகோபாஸனைக்குரிய அன்னையின் ஸ்தூல வடிவம் வர்ணிக்கப் பெற்றது. இம்பொழுது இச்செய்யுளில் ஸூக்ஷ்ம வடிவையுபாஸனை செய்வதற்குரிய யந்த்ர வடிவாயமைந்த ஸ்ரீதேவியை, அந்த யந்த்ரத்திற்குரிய பரிவார தேவதைகளோடு மானஸிகமாகவும், ரஹஸ்யமாகவும் உபாஸிப்பதற்குரிய முறையானது விளக்கப்பெறுகின்றது—

गणेशाणिमाद्याखिलैः शक्तिवृन्दैः
स्फुरच्छ्रीमहाचक्रराजे लसन्तीम् ।
परां राजराजेश्वरीं त्रैपुरीं त्वां
शिवाङ्कोपरिस्थां शिवां त्वां भजेऽहम् ॥ ९ ॥

கணேசாணிமாத்யாகிலை: சக்திவ்ருந்தை:
ஸ்புரச் ஸ்ரீமஹாசக்ர ராஜே லஸந்தீம்.
பராம் ராஜராஜேச்வரீம் த்ரைபுரீம் த்வாம்
சிவாங்கோபரிஸ்தாம் சிவாம் த்வாம் பஜேऽஹம்.

(ப-ரை)
மாமுதலான,
ஆல்; स्फुरत्-श्री-

(ப-ரை) गणेश-अणिमादि-अखिलैः-கணேசர்கள், அணிமாமுதலான, शक्ति-वृन्दैः-சக்திகளுடைய ஸமூஹங்களினுல்; स्फुरत्-श्री-महाचक्र-राजे-ப்ரகாசிக்கின்ற ஸ்ரீ மஹாசக்ரராஜத்தில்; लसन्तीम् - பொலிவுடன் விளங்கிக் கொண்டிருப்பவளும், परा-பரா என்ற வடிவங்கொண்டவளும், त्रैपुरीम्-த்ரிபுரா எனச் சிறப்புடன் விளங்குகின்றவளும், शिवाङ्क-उपरि-स्थिताम्-ஸ்ரீ பரமேச்வரனுடைய மடியின்மேல் வீற்றிருப்பவளும், शिवाम्-மங்கள வடிவாயிருப்பவளும், राज-राज-ईश्वरीम्-ராஜராஜேச்வரீ என்ற திருநாமத்தைக் கொண்டவளுமான, त्वाम्-உன்னை; अहम्-நான்; भजे-ஸேவிக்கிறேன்.

(பொ-ரை) ஓ அன்னையே! கணேசர்கள், அணிமாதிகள் முதலிய சக்திகளுடைய ஸமூஹங்களினுல் சூழப்பெற்று விளங்குகின்ற சிறந்த ஸ்ரீசக்ரத்திலே பொலிவுடன் திகழ்ந்து கொண்டிருப்பவளும், பரா என்ற வடிவத்துடனும், த்ரிபுரா என்ற பெயரைக் கொண்டு சிறப்புடன் விளங்குகின்றவளும், சிவனுடைய இடது பாகத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டவளும், மங்களவடிவாய்த் திகழ்பவளும், ராஜராஜேச்வரீ என்ற திருநாமத்துடன் விளங்குகின்றவளுமான உன்னை நான் ஸேவிக்கிறேன். (9)

(வி-ரை) யந்த்ரங்களுக்குள் சிறந்தது ஸ்ரீ சக்ரம். இத்தகைய ஸ்ரீ சக்ரத்தினுடைய நடுவே யமைந்துள்ள பிந்துவினுடைய அதிஷ்டான (நிலைத்த) தேவதையாக விளங்கும் ஓ அன்னையே! பவாநி! உனது திருவடியை நான் சென்னியுற ஸேவிக்கிறேன் என்பதும் ஸாரம்.

அந்த ஸ்ரீசக்ரமானது உனது திருமேனியின் வடிவாய்த் திகழும் பிந்து, முக்கோணம், அஷ்டகோணம்,

25027

தசகோணம், பஹிர்தசாரம், அந்தர்தசாரம், அஷ்டதளம், ஷோடசதளம், வ்ருத்தத்ரயம், பூபுரத்ரயம், என இவ்விதம் நடுவேயுள்ள பிந்துவிலிருந்து அடுக்கடுக்காக முறையே அமைவதாகும். மற்றும் அந்த அந்த கோணங்களுடைய இருப்பிடங்களில் அவைகளுக்குரிய தேவதைகளாம் காமேச்வரீ முதலிய கணேசைகளாலும், அணிமா முதலிய அஷ்டைச்வர்ய சக்திகளாலும் சூழப்பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்ற சக்ர வடிவாயிருக்கும் உன்னை ஸேவிக்கிறேன் எனவும் கொள்ளலாம்.

இனி, இப்பெருமைவாய்ந்த ஸ்ரீசக்ரத்தின் நடுவேயுள்ள பிந்துவிலே அமைந்த ஸ்ரீபவாநியினுடைய திருவுருவானது; பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற வாக்பவ கூடத்தினுடைய பீஜத்தின் வடிவாயமைந்த 'பரா' என்ற உருவமாகவும்; அந்த பரா என்ற வடிவமும்; இடா, பிங்களா, ஸுஷும்நா என்ற மூன்று நாடிகளிலும், தனது சக்தியினுல் (நிலைபெற்று) சிவனுடைய இடது பாகத்தை நிலைத்த இருப்பிடமாகக் கொண்ட சக்தியென வழங்கப் பெற்று, முடிவிலே ஸகல மங்களத்தையும் கொடுக்கவல்ல பராசக்தி என்ற வடிவாய்த் திகழ்வதும் ஆகும். இச்சிறப்புடன் விளங்கும் அன்னையாம் ஸ்ரீபவாநீதேவியை நான் அநவரதமும், (இடையருது) ஸேவிக்கிறேன் என்பதும் திரண்டஸாரமாகும்.

1. அந்த ஸ்ரீசக்ரத்தினுடைய விளக்கமும் வருமாறு—

"बिन्दुत्रिकोणवसुकोणदशारयुग्ममन्वश्रनागदलषोडशकर्णिकारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च श्रीचक्रमेवमुदितं त्रिपुराम्बिकायाः ॥"

Scanned by CamScanner

என்பது ஸ்ரீசக்ரத்தினுடைய இலக்கணமாகும்.

ஸ்ரீசக்ரத்தினுடைய நடுவேயுள்ள வட்ட வ்ருத்த) வடிவாயமைந்த பிந்துவுக்கு, "ஸர்வாநந்தமயம்" என்று பெயர். அந்த பிந்துவிலே, திதிகளுடைய (தினங்கள்) அபிமாநிகளான, காமேச்வரீ, பகமாலிநீ நித்யக்லிந்நா பேருண்டா, வஹ்நிவாஸிநீ, மஹாவித்யேச்வரீ, சிவதூதீ, த்வரிதா குலஸுந்தரீ, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலிநீ, சித்ரா, மஹா நித்யா என்ற ஸ்ரீபவாநியினுடைய விபூதிகளான பதினைந்து தேவதைகளும், அவர்களுக்கு இடையிலே, பாலா, அச்வாரூடா, நகுலீ, பஞ்சமீ, பைரவீ, பகலாமுகீ, ஸிம்ஹாஸநா, சாரதீ, காளீ, துர்கா, சூலிநீ என்ற தசாவதார தேவதைகள் முதலான விபூதிகளும், மந்த்ரிணியான மாதங்கிநியும், தண்டிநியான வாராஹியும், இவர்களுக்கு நடுவே ஸ்ரீ ராஜராஜேச்-முறையே வரியும் வஸிக்கின்றனர்.

2. முன்பு கூறப்பெற்ற அந்த பிந்துவுக்கு வெளியே முக்கோணம் இருப்பதாகும். இந்த முக்கோணத்திற்கு "ஸர்வஸித்திப்ரதா" (எல்லா ஸித்திகளையும் கொடுக்க வல்லது) எனப் பெயர். அவ்விடத்தில், பராபரரஹஸ்ய யோகிநிகள்" என்ற காமேச்வரீ வஜ்ரேச்வரீ, பகமாலிநீ என்ற சக்திகளும், "த்ரிபு

(1) ராம்பா" என்ற கணேச்வரியும், முறையே வஸிக்கின்றனர்.

3. இந்த முக்கோணத்திற்கு வெளியே; அஷ்ட கோணங்கள் (எட்டுக்கோடுகள்) அமைந்துள்ளன. அவைகளில், "ரஹஸ்யயோகிநிகள்" என்ற, வசிநீ, காமேச்வரீ, மோதிநீ, விமலா, அருணா, ஜயிநீ,

ஸர்வேச்வரீ, கௌலிநீ என்ற தேவதைகளும்,

(2) "த்ரிபுராஸித்தா" எனச் சொல்லப் பெறும் சக்ரேச்வரியும் முறையே வஸிக்கின்றனர். இந்த அஷ்ட கோணத்தையே "ஸர்வரோகஹரம்" எல்லாப் பிணிகளையும் அகற்றவல்லது) என அழைப்பர்.

4. இந்த அஷ்டகோணத்திற்கும் வெளியே, தசகோணம் பத்து மூலைகள் ஒன்று அமைந்துள்ளது. இந்த தசகோணத்தை "ஸர்வரக்ஷாகரம்" எல்லா ரக்ஷைகளையும் செய்யவல்லது என அழைப்பர். அக்கோணத்திலுள்ள சக்திகள், "நிகர்ப யோகிநிகள்" எனவும் அழைக்கப் பெறுவர் அந்த யோகிநிகளும்; ஸர்வஜ்ஞா, ஸர்வசக்தி ஸர்வைச்வர்யப்ரதா, ஸர்வஜ்ஞாநமயீ, ஸர்வவ்யாதி விநாசிநீ, ஸர்வாதாரஸ்வரூபா, ஸர்வபாபஹரா, ஸர்வாநந்தமயீ ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப்ஸிதபலப்ரதா என்றவர்களுமாவர்.

(3) அவ்விடத்தில் 'ஸ்ரீத்ரிபுரமாலிநீ" என்ற புகழ் பெற்ற சக்ரேச்வரியும், வஸிக்கின்ருள்.

5. இந்த தசகோணத்திற்கும் வெளியே, "ஸர்வார்த்த ஸாதகம்" (எல்லா விருப்பங்களையும் ஸாதித்துக் கொடுக்கவல்லது) என்ற மற்ருெரு தசகோணமுள்ளது. இந்த இரண்டாவது தசகோணத்திலே "குலோத் தீர்ணயோகிநிகள்" என்ற ஸர்வஸித்திப்ரதா, ஸர்வஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியம்கரீ, ஸர்வமங்களகாரிணீ, ஸர்வகாமப்ரபூர்ணா ஸர்வதுக்க விமோசிநீ, ஸர்வம்ருத்யுப்ரசமநீ, ஸர்வவிக்நவிநாசிநீ, ஸர்வாங்கஸுந்தரீ, ஸர்வஸௌபாக்யதாயிநீ என்ற

(4) தேவதைகள் வஸிக்கின்றனர். அவ்விடத்தில் "த்ரி

புராஸ்ரீ:" வாஸம் செய

Scanned by CamScanner

(4) புராஸ்ரீ :" என்ற புகழ் பெற்ற சக்ரேச்வரியும் வாஸம் செய்கின்ருள்.

6. முன்பு சொன்ன இரண்டாவது தசகோணத்திற்கும் வெளியே, "ஸர்வ ஸௌபாக்யதம்" (எல்லா ஸௌபாக்யங்களையும் கொடுக்கவல்லது எனச் சொல்லப்பெற்ற சதுர்தசகோணம் (பதினன்கு மூலைகள்) அமைந்துள்ளது. அந்தக் கோணத்திலே, "ஸம்பரதாய யோகினிகள்" எனச் சொல்லப்பெறுகின்ற, ஸர்வ ஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ ஸர்வாஹ்லாதகாரிணீ ஸர்வஸம்மோஹினீ, ஸர்வஸ்தம்பினீ, ஸர்வஜ்ரும்பிணீ. ஸர்வவசம்கரிணீ, ஸர்வரஞ்ஜனீ, ஸர்வோந்மாதினீ, ஸர்வார்த்தஸாதினீ, ஸர்வஸம்பத்ப்ரபூரணீ, ஸர்வமந்த்ரமயீ, ஸர்வத்வந்த்வக்ஷயம்கரீ என்ற பதினன்கு சக்திகளும், 'த்ரிபுர
(5) வாஸினீ" என்ற சக்ரேச்வரியும் முறையே வஸிக்கின்றனர்.

7. இந்த சதுர்தசாரகோணத்திற்கும் வெளியே "ஸர்வஸம்க்ஷோபணம்" எல்லாத் துன்பங்களையும் கலங்கச் செய்யவல்லது) என்ற அஷ்ட (எட்டு) தளத் தாமரையொன்று உண்டு. (தாமரையிதழ் போன்ற எட்டு தளங்கள்) அவைகளில் முறையே, 'குப்ததர யோகினிகள்" எனச் சொல்லப் பெறுகின்ற, அநங்க குஸுமா, அநங்கமேகலா, அநங்கமதநா, அநங்க மதநாதுரா. அநங்கரேகா. அநங்கவேகினீ, அநங்காங்குசா, அநங்கமாலினீ என்ற எட்டு யோகினிகளும், "த்ரி
(6) புரஸுந்தரீ" என்ற சக்ரேச்வரியும் முறையே வஸிக்கின்றனர்.

8. அந்த அஷ்டதளத்திற்கும் வெளியே, ஷோடசதளம் (பதினறு இதழ்கள்) என்ற கமலமுள்ளது. அதற்கு "ஸர்வாசாபூரகம்" (எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்யவல்லது) எனப் பெயர். அந்த ஷோடசதளகமலத்தில், கர்மாகர்ஷிணிகா, புத்யாகர்ஷிணிகா, அஹங்காராகர்ஷிணிகா, சப்தாகர்ஷணிகா, ஸ்பர்சாகர்ஷணிகா. ரூபாகர்ஷணிகா. ரஸாகர்ஷணிகா. கந்தாகர்ஷணிகா, சித்தாகர்ஷணிகா தைர்யாகர்ஷணிகா ஸம்ருத்யாகர்ஷணிகா, நாமாகர்ஷணிகா, பீஜாகர்ஷணிகா. ஆத்மாகர்ஷணிகா, அம்ருதாகர்ஷணிகா. சரீராகர்ஷணிகா. என இவ்விதம் பதினறு
(7) "குப்தயோகினிகளும்" "த்ரிபுரேசீ" என்ற சக்ரேச்வரியும் முறையே வாஸம் செய்கின்றனர்

